MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR :: MADRAS 41

கிறிஸ்தவ

# ஞானோதயாபாசவிளக்கம்

ஏசுவை நம்பினால்

# இரக்ஷிப்படையலாமா?

இவை

யாழ்ப்பாணத்து

வடகோவை-ஸ்ரீமத் சபாபதி நாவலரவர்கள்

மாணாக்கரு ளொருவரும்,

சென்னை ஹிந்து லருமேலக சங்கத்தின்

மெம்பரு ளொருவருமாகிய

மாவை, வே - விசுவநாத பிள்ளையால்

இயற்றப்பட்டன.

ஷையாரிவற்றைத்திருத்தியுஞ்சேர்த்துங்கொடுக்க,

இந்துமதப் பிரசங்கி

நெ - சி - விசுவநாத சாஸ்திரியால்

௨-வது பதிப்பாக,

மதராஸ் ரிப்பன் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன.

பிலவ-௵ சித்திரை-௴.

1901.

## கிறிஸ்தவ ஞானோதயாபாசவிளக்க விஷய அட்டவணை.


| எண். | இயல். விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| | முகவுரை ... ... ... | க |
| க-ம் | இயல். கிறிஸ்தவ ஞானோதயகாரர் இயல்பு. | ௯ |
| உ-ம் | இயல். "படைத்தான்படைப்பெல்லாம் மனுவுக்காக" என்பதன் மறுதலை ... | க0 |
| ௩-ம் | இயல். "மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்பதன் மறுதலை ... | கஉ |
| ச-ம் | இயல். பைபிலின் தெய்வலக்ஷண மறுதலை. ... | க௩ |
| ரு-ம் | இயல். பைபிலின் உலகசிருட்டிமறுதலை ... | க௬ |
| ௬-ம் | இயல். பைபிலின் தெய்வசித்த மறுதலை ... | உரு |
| எ-ம் | இயல். ஏசுவின் தீர்க்கதரிசன மறுதலை ... | உஎ |
| அ-ம் | இயல். ஏசு பாவமன்னிப்பின் மறுதலை ... | உஅ |
| ௯-ம் | இயல். ஜன்மாந்தர மின்றென்பதன் மறுதலை ... | ௩க |
| க0-ம் | இயல். ஏசுவின் அவதாரபிரபல்லிய மறுதலை ... | ௩எ |
| கக-ம் | இயல். ஏசு சற்குருவென்பதன் மறுதலை. | ௩அ |
| கஉ-ம் | இயல். பைபிற் கடவுளின் நியாயத் தீர்ப்பு மறுதலை ... | ௩௯ |
| க௩-ம் | இயல். ஏசுவின் மார்க்கத்தை அகஸ்தியர் கேள்விப்பட்டிருந்தாரென்பதன் மறுதலை. ... | சரு |
| கச-ம் | இயல். முடிவுரை. ... ... ... | ரு0 |

## ஏசுவை நம்பினால் இரட்சிப்படையலாமா?

## என்பதின் விஷய அட்டவணை.


| எண். இயல். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ௧-ம் இயல். | ஏசு என்பவரின் வரலாறு | ... ௫௩ |
| ௨-ம் இயல். | ஏசு தெய்வாமிசமுடையரா? | ... ௫௪ |
| ௩-ம் இயல். | ஏசு அறிவினாற் சிறந்தவரா? | ... ௫௬ |
| ௪-ம் இயல். | ஏசு பராக்கிரமசாலியா? | ... ௫௯ |
| ௫-ம் இயல். | ஏசு சித்தியாயினுமுடையரா? | ... ௫௯ |
| ௬-ம் இயல். | ஏசு இரக்ஷகராகத்தான் வந்தாரா? | ௬0 |
| ௭-ம் இயல். | ஏசு தாம் பின் யாவர்? | ... ௬௫ |
| ௮-ம் இயல். | பைபில் கூறும் ஏசுவின் சரித்திரம் பொய்யென்பது. | ௬௮ |
| ௯-ம் இயல். | முடிவுரை. | ... ௭0 |



இப்பொழுது அச்சிடுதற்கு ஆயத்தமாக்கப்பட்டுவரும் புத்தகங்கள்:—

திருமூலர் திருமந்திர வுரை—இது பன்னிரு திருமுறைகளுட் பத்தாவது திருமுறை.

பதஞ்சலி யோகசாஸ்திரம்—இது வேதவியாச வியாக்கியானத் தமிழ்மொழிபெயர்ப்பு.

மாவை, வே-விசுவநாத பிள்ளை.

# முகவுரை.

ஆன்மாக்கள் முன்னர் இகபரவின்பங்களை நுகர்ந்து பின்னர் ஜனன மரண துன்பத்தினின்று நீங்கி, சிந்தையு மொழியுஞ் செல்லாநிலைமைத்தாய பரகதி யெய்திப் பரிபூரணானந்த முறுமாறு பரம கருணாநிதியாகிய * பரமேசுவரனால் சிருஷ்டிகள்தோறும் † சாமானிய விசேடமாக அருளிச்செய்யப்படுவன வேதாகமங்களாம்.

அவற்றுள் ‡ வேதமென்பதன் பொருள் அறிதற் கருவியென்றும், ¶ ஆகம மென்பதன் பொருள் ஆன்மாக்

* வேதாகமங்கள் அநாதியா யிருப்பினும் அவை பரமேசுவரனால் சிருஷ்டிகள்தோறும் வெளியாதல் பற்றி, "பரமேஸ்வரனால் சிருஷ்டிகள்தோறும் அருளிச்செய்யப்படுவன வேதாகமங்களாம்" என்றுரைக்கப்பட்டது.

† "வேதமோடாகமமெய்யாமிறைவனூ
லோதும்பொதுவுஞ்சிறப்புமென்றுன்னுக"—
என்றருளிச்செய்தனர் திருமூலநாயனார்.

‡ வேத மென்னும் பதம் வித்தென்னும் பகுதியினின்றும் தோன்றியது. பிரத்தியக்ஷத்தானும் அநுமானாதிகளானும் எவருமெளிதின் அறிய முடியாத வஸ்துவைத் தெளிவாய்க் காட்டும் சொன்மயக் கருவியாயுள்ளது வேதமாம்.

¶ ஆகம மென்னும் பதத்துள், ஆ என்பது ஞானத்தையும், க என்பது, ஆன்மா அதனையுறுஞ் சாதனத்தையும், ம என்பது அதன் மல நாசத்தையு முணர்த்தும்.

களுக்கு ஞானத்தை யுண்டாக்குவ தென்றுமாம். ஆகவே, வேதாகமங்க ளிரண்டும் $ ஒருகருத்துற்றனவே யாமென்பது தெள்ளிதின் விளங்கற்பாலதாயிற்று.

அவ்வேதமானது: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வகையினதாம். அவற்றுள் இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வேதம் நூற்றொரு சாகையும், சாமவேதம் ஆயிரம் சாகையும், அதர்வண வேதம் ஒன்பது சாகையும் உடையனவாம். இந்நான்கும் கர்மாநுஷ்டானங்களையும், ஆத்தியான்மீக ஞானத்தையும் விதந்து கூறும்.

இருக் என்றால் மந்திரம்; யசுர் என்றால் கட்டளை; சாமம் என்றால் ஸ்துதி; அதர்வணம் என்றால் எங்கும் கலந்தது: அதாவது மேற்படி மூன்று வேதங்களிலும் கலந்திருப்பதாம்.

அவ்வேதமானது: சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம், கற்பம் என ஆறு அங்கங்களையுடையது. சிக்ஷையாவது வேதத்தின் ஸ்வரங்களையும் உச்சாரண லக்ஷணத்தையும் சொல்வது; வியாகரணமாவது வேதத்தின் பதலக்ஷணத்தைச் சொல்வது; நிருத்தமாவது வேதத்தின் பதங்களுக்கு விவரணம் கூறுவது; சந்தஸாவது வேதத்தின் பலதுறைப்பட்ட வாக்

$ "நாதனுரையிவைநாடினிரண்டந்தம்
பேதமதென்பர்பெரியோர்க்கபேதமே"—
என்று மருளிச்செய்தனர் திருமூலநாயனர்.

கியங்களுக்கு 'இன்ன இன்னது இத்தனை இத்தனை எழுத்துடையது' என அக்ஷரவரையறை கூறுவது; சோதிடமாவது வேதத்தில் சொல்லப்பட்ட வைதிக கருமங்களைச் செய்யவேண்டிய காலத்தைச் சொல்வது; கற்பமாவது வைதிக கருமங்களைப் பிரயோகஞ் செய்யும் முறையைக் கூறுவது. இவை ஆறும் வேதங்களை ஓதுதற்கும், அவற்றின் பொருளை புணர்வதற்கும், உணர்ந்தவாறு ஒழுகுவதற்கும் அத்தியாவசியமாக முன்பு கற்கவேண்டிய சாஸ்திரங்களாம்; அல்லாமல் அவ்வேதம் எந்நாளும் ஓர் எள்ளளவேனும் மாறுமலும், மாற்றப்படாமலும் நிலைபெறும்படி (அரசர்க்கு மெய்காப்பாளர்போல) காத்து நிற்பனவாம்.

அவ்வேதமானது: கர்மகாண்டம், ஞானகாண்டம் என்னும் இருபகுப்புடையது. மற்றொரு வழியில் அது மந்திரவாதம், அர்த்தவாதம், விதிவாதம் என மூன்று வேற்றுமைகளைப் பெற்றுள்ளது. அவற்றுள் கர்மகாண்டத்தில் யாக முதலிய கருமங்கள் கூறப்பட்டிருக்கின்றன; ஞானகாண்டத்தில் ஜீவாத்துமாவானது பரமாத்துமாவை அடையும் வழி, உபாசனையாகிய இவை கூறப்பட்டிருக்கின்றன. மந்திரவாதமாவது அவரவர் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களை விரித்துக்காட்டுவது; அர்த்தவாதமாவது கேட்பவர்களுக்கு எளிதில் விருப்பமுண்டாகத் துதிரூபமாகச் சொல்லி, அக்கருமங்களைச் செய்து சுகம்பெறத் துணைக்கருவியாய் நிற்பது;

விதிவாதமாவது காட்சிமுதலிய பிரமாணங்களால் அறிதற்கருமையான பரம்பொருளை யுணர்த்துவது.

அவ்வேதத்தில் சிருஷ்டிக்கிரமம், தெய்வலக்ஷணம், ஆன்மலக்ஷணம், மனமுதலிய அந்தக்கரணலக்ஷணம், பந்தலக்ஷணம், விடுதிலக்ஷணம், யோகமுறை, ஞானமுறை முதலியன வெல்லாம் தத்துவ சாஸ்திரங்களுக்கும், தர்க்க சாஸ்திரங்களுக்குஞ் சிறிது மாறுபடாமல் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் கூறப்பட்டிருக்கின்றன.

அவ்வாகமமானது: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்னும் உஅ - பகுப்பினை யுடையதாகும். அது சரியை கிரியை யோகஞானங்களையும், அவற்றானெய்தற்பாலதாய சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதவிகளையும், பதி பசு பாசங்களையும், அவ்வவற்றி னிலக்கணங்களையும் தெளிவுற வினிது விளக்குவதாகும். இன்னுமிவற்றின் சார்பாக ஸ்மிருதி புராண இதிகாசங்களும் பிறவு மிருக்கின்றன.

அவ்வேதாகமங்களானவை: ஆன்மாக்களுடைய கர்மபரிபாகத்தையும், புத்தி தாரதம்மியத்தையும், சரீர பலாபலத்தையும், காலதேச வேறுபாடுகளையும் அநுசரித்து

அனேக பிரகாரங்களாக முத்தி அடையும் வழிபாடு களைச் சொல்லுகின்றன. ஆகையால் அவரவர் தகுதிக் கேற்றபடி ஒழுகலாம்.

அவ்வேதம் மிகுவிரிவாயிருப்பதால் ஸ்ரீவேதவியாசர் அதனை நாலுபாகமாக்கி ஒவ்வொரு வேதத்தையும் ஒவ்வொரு அந்தணவகுப்பினரு முன்னதாகக் கற்கவிதித்தனர். அவ்வாறே கற்று வருகின்றமையால் அது காரணமாகச் சிலர் ருக்குவேதிகளென்றும், சிலர் யசுர்வேதிகளென்றும், சிலர் சாமவேதிகளென்றும், சிலர் அதர்வண வேதிகளென்றும் சொல்லப்படுகின்றார்கள். அதனால் மற்ற வேதங்களைக் கற்கப்படாதென்பதன்று; தங்களுக்குரிய வேதத்தை முன்பு கற்கவேண்டு மென்பது கருத்து. அதர்வண வேதிகள் வடதேசத்தி லிருக்கின்றார்கள். அவ்வேதத்திற்கு ஸ்ரீ மாதவாசாரியர் (வித்தியாரணியர்) முதலானோர் பாஷியம் செய்திருக்கின்றார்கள்.

அவ்வேதத்திலுள்ள ஒருவாக்கியத்தில் ஒருஎழுத்துக் குறைந்தாலும், அதிகப்பட்டாலும், மாற்றப்பட்டாலும் அவ்வாக்கியம் சுரத்தோடு ஒத்து ஓதுதற்கு இசையாது; அதுமாத்திரமா? பொருளும் கெட்டு மற்றைய நூல்களோடு மாறுகொள்ளும்; அதுமாத்திரமா? வியாகரணத்துக்குப் பகையாகும்; அதுமாத்திரமா? சந்தசு என்னு மெழுத்துக்கணிதநூலுக்கு விரோதப்படும்; அதுமாத்திரமா? நியாயசாஸ்திரத்திற்கும் அசம்மதமாகும்.

அவ்வேதத்தின் பிற்பாகமாகிய ஞானகாண்டமென்னும் உபநிடதங்கள் (10) தசோபநிடதங்களெனவும், (32) துவாத்திரிம்சத் உபநிடதங்களெனவும், (108) அஷ்டோத்திர சதோபநிடதங்களெனவும் பலவாயிருக்கின்றன. அவற்றுள் தசோபநிடதங்களுக்குச் சர்வாசாரியர்களும் பாஷியஞ் செய்திருக்கின்றார்கள். அந்தத் தசோபநிஷத்துக்களாவன :— ஈசம், கேனம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம், சாந்தோக்கியம், பிரகதாரணியம், ஐதரேயம் என்பனவாம். அவ்வுபநிடதங்கள் ஜகஜீவபர விலக்கணங்களைப் பற்றியும், மோக்ஷசாதன விலக்கணங்களைப் பற்றியும் சாங்கோபாங்கமாகச் சொல்லுகின்றன.

வேதம் என்னும் சொல் ஆரியர்களான நம்மவர்கள் மூல சாஸ்திரத்திற்கே உரியது. மற்றக் கிறிஸ்தவர்கள் இத்தேசத்திற்கு வந்தபிறகு தங்கள் மதத்திற்குச் சிறப்பாயிருக்குமெனக் கருதி வேதமென்னும் சொல்லைத் தங்கள் (பைபில்) புஸ்தகத்திற்கு வைத்துக்கொண்டார்கள். கிறிஸ்துமத மூலப்புத்தகம் * ஆதியில் ஹீப்ரூ, கிரீக் ஆகிய இவ்விரு பாஷைகளினெழுதப்பட்டுப் பின்னர் மற்றப் பலபாஷைகளினு மொழிபெயர்க்கப்பட்டது. மேற்கூறிய அவ்விரு பாஷைகளினும் வேதம் என்னும் சொல் கிடையாது. வேதமென்பது

* ஆதியில் பைபிலின் பழைய ஏற்பாடு ஹீப்ரு (Hebrew) பாஷையிலும், புதிய ஏற்பாடு கிரீக் (Greek) பாஷையிலும் எழுதப்பட்டன.

சமஸ்கிருத பாஷைச்சொல்லானமையால் அப்பாஷையிலுள்ள நமது ஆரியமத மூலக்கிரந்தத்திற்கே பொருந்துமென்பதாம்.

இன்னு மெவ்வளவோ அளப்பரு மகத்துவங்கள் நமது வேதாகமங்கட் கியற்கையில் வாய்ந்துளவேயாம் இத்துணை யியல்பிற்குரிய மகத்துவம் வாய்ந்த நமது வேதாகமங்களி னருமைபெருமைகளை யாராய்ந் துணருமாற்றலிலராய அநாரியக் கிறிஸ்தவர்கள், "உம்மவர்களாகிய அகத்தியர் முதலிய மகா விருடிகளும் உங்கள் ஆரிய மதானுஷ்டானங்களை யிகழ்ந்து கூறியிருத்தலை யறியீரோ"வென்றுரைத்து, நமது மதானுஷ்டானங்களை யெல்லா மிகழ்ந்து பிரசங்கிப்பதோ டமையாது அதன் ஸ்தாபித நிமித்தம் சிறு சிறு துண்டுப் புத்தகங்களையு மெழுதி அச்சிட்டு வெளிப்படுத்தி வருதலினுபாசத்தை நன்குணர்த்துமாறும், அவர்கள் மதத்தி னிழிவைத் தெளிவுறக் காட்டுமாறும் இச்சிறுபுத்தகங்களையெழுதி வெளியிடலாயினே மென்பது. முகவுரை முற்றிற்று.

## கிறிஸ்தவ

# ஞானோதய ஆபாச விளக்கம்.

### க-ம் இயல். கிறிஸ்தவ ஞானோதயகாரர் இயல்பு

ஞானமிருந்த வூரிற் குடியிருந்து மறியாத பாதிரிகள், ஞானம் பிறந்து வளர்ந்து விளங்கப்பெற்ற இந்து தேசமாகிய ஆரிய தேசத்துக்கு வந்து சேரப்பெற்ற பெரும்பாக்கியத்தைப் பெற்றும், ஞானம் இதுவெனத் தெளிந்துகொள்ளும் பாக்கியம் பெறாதவராகி, தமது அஞ்ஞானத்தையே விலைகூறித்திரிவாராயினர். ஞானம் இது, அஞ்ஞான மிதுவெனப் பகுத்தறியும் அறிவு சிறிது மில்லாத இவர்களா உலகத்துக்கெல்லாம் ஞானம் இதுவெனக் காட்டிச் சித்தி முத்தியடைந்த பெரியோர்களை ஈன்றருளிய இந்திய தேசத்துக்கு ஞானோபதேசம் பண்ண வல்லவராவார்கள்! கொலை யென்னும் சொல்லையும் கேட்டறியாத வொரு சந்நியாசிக்கு, அல்லும் பகலும் அதனையே புரியும் ஒருவன் உபதேசம் பண்ணப் புகுந்ததேபோலா மிப்பாதிரிகள் இந்திய தேசத்துக் குபதேசம்பண்ணப் புகுந்த செய்தியென்று விடுத்து மேற்செல்வாம்.

### உ-ம் இயல். "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக" என்பதன் மறுதலை.

இத்தகைய பாதிரிகளால் வெளியிடப்பட்ட ஞானோதயமென்னும் ஆபாச நான்முகத்திலே "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க என்று நீங்கள் சொல்லிக்கொள்ளுகிற நல்ல வாக்கியத்தின்படி" என வரையப்பட்டிருக்கின்றது. இங்கே 'நீங்கள்' என்றது இந்துக்களைப் பாதிரிகள் முன்னிலைப் படுத்திக் கொண்டபடியாம். 'படைத்தான்' என்றற்றொடக்கத்து வாக்கியத்தைப் பாதிரிகள்வாயில்நின்றும் இந்துக்கள் கேட்டிருப்பார்களேயன்றி இந்துக்கள் அதனை வாயினாற் கூறி வழங்கக் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை. இந்துக்களுக்கு இவ்வாக்கிய மெவ்வாறு வாயில் வரும். அது அவர்கள் கொள்கைக்குப் பொருந்தாத வாக்கியமன்றோ? புராண இதிகாச சாஸ்திராதிகளில் இவ்வாக்கியத்தை யாண்டும் கண்டிலேம்! ஆதலின், பாதிரிகள் தங்கள் வாக்கியத்தை இந்துக்கள் சொல்லிக்கொள்ளுகிற வாக்கியமென்று கூறியது வசியோபாயமாம். இவ்வகைப் புரட்டு இப்பாதிரிகட்குப் பண்டு தொட்ட இயல்பேயாம். 'படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக' என்னும் வாக்கியம் இந்துக்களுக்குக் கனவிலாயினும் வாயில் வருமா? ஆடு மாடு பன்றிகளைத் தினங் கொன்று தின்பவர்களாகிய பாதிரிகட்கு மோசேயெழுதிய "கொலைசெய்யாயாக" என்னுங் கற்பனை தடை செய்வ

தாகலின் 'படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக' வென்று ஒரு புறநடை வாக்கியம் அப்பாதிரிகளாலேயே கட்டி அமைத்துக்கொள்ளப்பட்டது; படவே, இந்துக்கள் சொல்லிக்கொள்ளுகின்ற நல்ல வாக்கியமென்பது மோசவாக்கியமாயிற்று; ஆகவே, அது பாதிரிகளது அஞ்ஞான வாக்கியமேயாமென்க. *கடவுள் யானை முதல் எறும்பீறு யுள்ள சீவகோடிகளையும் ஏனைய வஸ்துக்களையும் படைத்தது மனுவுக்காக வென்பது சத்தியமேயானால் விஷமுள்ள பாம்புகளையும், கொடிய தேள் முதலானவைகளையும், மனுஷரை வதைக்கின்ற சிங்க முதலானவைகளையும், மனுஷரையே பக்ஷிக்கின்ற மனுஷரையும் என்ன பிரயோசனத்துக்காகப் படைத்தார்? சிங்க முதலியவைகளுக்காகவே மனுஷரைப் படைத்தான் என்று சொல்லப்போகாதா? இவ்வகை ஆபாச வாக்கியம் அஞ்ஞான பிண்டமாகிய பைபிளிலேயே யுள்ளதென்று தள்ளுக.

---

* இதுபற்றித் துறைசை - ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளும் தாமியற்றிய ஏசுமத நிராகரணத்தில்,

"அறிகிலைநரர்க்காய்வேண்டியளித்தனன்மிருகமாதி
யிறையவனென்றுயோரீயீன்றிடமலமீதாருஞ்
சிறுபுழுவிரையுறுதென்செய்குவையதனைநோக்க
வறிவருநுண்ணியதேகியனந்தநீயவையென்செய்வாய்.

வாய்திறந்தலறும்வேங்கைவல்விடமுமிழ்பாம்பாதி
நேயமற்றெவர்கூற்றுயநிகழ்வதெனுலகத்தங்காட்
யவனுதிக்கோதுஞ்சொன்னெறியடங்காதென்னி
யகோவாதிமாந்தர்க்கடங்கியவிதமென்கொல்லோ!"

என்றருளிச்செய்தனர்.

## ௩-ம் இயல். "மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்பதன் மறுதலை.

உலகத்திலுள்ள எல்லாவற்றையும் மனுஷருக்குக் கடவுள் உபகாரமாகக் கொடுத்தது மனுஷர் அக்கடவுளுடைய மகிமையை விளங்கச் செய்வதற்காக வென்றால், ஒருவன் தனக்கு ஆகவேண்டிய ஒரு வேலைக்காக ஒரு கூலி ஆளை முன்பணம் கொடுத்து அமைத்துக் கொண்டதுபோலாகும். அங்ஙனமாயின், அவர் மனுஷருக்குப் பிரதியுபகாரம் வேண்டாது நன்மைசெய்பவரென்று கிறிஸ்தவர் கூறுவது பொய்யாம். ஒருவன் தன்னை மகிமைப்படுத்தும் ஒரு பிரயோசனங்கருதி ஜனங்களை அழைத்துத் தன்னை மகாப்பிரபு, சத்தியத்துக் கரிச்சந்திரன், கொடைக்குக் கன்னன் எனப் புகழுங்களென்று பொருள் கொடுத்துப் புகழ்ச்செய்வானாயின், அவனை உலகம் வீணன், மூடன், டம்பன் என இகழாது போகாதன்றே! அதுபோலக் கிறிஸ்தவக் கடவுளும்பொருள்கொடுத்துத் தமக்குப் பெருமை தேடுபவராயினர்; ஆகவே, இயல்பாக மகிமை இல்லாதவரென்பது துணியப்படும். மனுஷருள்ளே பிரதியுபகாரம் விரும்பி ஒரு நன்றி செய்வாரைப் பெரியோர் என்று கற்றோர் கருதாராதலின், * பிரதியுபகாரம்விரும்பி நன்றி

* "கைம்மாறுவேண்டா கடப்பாடுமாரிமாட்,
டென்னாற்றுங்கொல்லோ வுலகு"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் கூறிய நீதியையும் கிறிஸ்தவக் கடவுள் அறிந்திலர்போலும்.

செய்யும் கிறிஸ்தவக் கடவுள் ஒருபோதும கடவுளாக மாட்டாரென்க.

---

## ௪-ம் இயல். பைபிலின் தெய்வலக்ஷணமறுதலே.

கிறிஸ்தவர், தங்கள் கடவுளுக்கு எல்லாச் சற்குணங்களுமுண்டென்றும், இதர மதஸ்தருரைக்கும் கடவுளுக்கு அப்படிப்பட்ட சற்குணங்களில்லையென்றும் சொல்லுகின்றமையால் அவர் சொல்லுவதுபோல அவர் கடவுளாகிய ஏகோவாவினுடைய குணங்களைப்பற்றிச் சிறிது ஆராயக்கடவோம்.

அளவில்லாத ஞானம், களங்கமற்ற பரிசுத்தம், சர்வவல்லமை, பிசகாத நீதி, மட்டில்லாத தயை என்பன ஏகோவாவினுடைய குணங்களென்பதுண்மையானல் மனுஷரைப் படைத்துப் பின் ஏன் படைத்தோமென்று மனஸ்தாபமடையமாட்டார். அதினல் அளவில்லாத ஞானமில்லாதவரென்பது வெளிப்படை. களங்கமற்ற•பரிசுத்தமுடையவரானல் அவர் ஒருவர் செய்த பாவத்துக்காக "மூன்று நாலு தலைமுறைவரைக்கும் விசாரிக்கும் எரிச்சலுள்ள தேவனுயிருக்கிறேன்" என்று கூறமாட்டார். சர்வவல்லமை உடையரானல் தம்மை வணங்கித் தமது கட்டளைக் கமைந்து நடக்கும்படி . சிருஷ்டித்த ஆதாம் ஏவாளைச் சாத்தான் சென்றுமித்துருபேதம் பண்ணவும், அதனல் தான் விய

சனப்படவும், * தமது மகிமை விளங்கச் சிருஷ்டித்த உலகம் சாத்தான் வசப்படவும் சமயம் நேர்ந்திடாது. பிசகாத நீதி உடையவரானால் ஒரே ஒரு முறை ஊசி திருடினவனுக்கும், ஆயுசுள்ளமட்டும் உயிர்க்கொலையே செய்து திரிந்தவனுக்கும் தாரதம்மியமின்றி மீளா நரக தண்டனை விதிக்கமாட்டார். மட்டில்லாத தயை உடையரானால் மனுஷரைக் காரணமின்றிச் சிலர் திரவியவான்களாகவும், சிலர் நீங்காத தரித்திரராகவும், சிலர் அங்கபூரணராகவும், சிலர் குருடர் செவிடர் ஊமர் சப்பாணிகளாகவும், சிலர் திடசரீரிகளாகவும், சிலர் நீங்காப் பிணியாளராகவும் படைத்துப் பூரண அஞ்ஞானத்தி லாழ்த்தி ஒரே ஒரு பிறப்பில் நரகத்தையோ மோட்சத்தையோ அடையுமாறு விதிக்கமாட்டார்.

[எண்ணாகமம். 15: 32—36.] இஸ்ரவேல் புத்திரர், வனாந்தரத்தில் ஓய்வு நாளில் விறகு பொறுக்குகிற ஒருவனை மோசே ஆரோன் இவர்களிடத்தில் கொண்டு

* இதுபற்றித் தாமியற்றிய ஏசுமத சங்கற்ப நிராகரணத்தில்,
"தன்மகிமையுணர்ந்துதனைத்தொழவேண்டி
யுயிர்கடமைத்தருதலானே
யுன்னிறைக்குப்பூர்த்தியிலைசுதந்திரமு
மில்லையாமொருபேய்சூழ்ந்த
வன்மைபெறுசூழ்ச்சியின்மற்றதுமுற்று
மையிற்சமுபருவுமுங்கோன்
றுன்னுவலிபேய்வலியாற்பேய்வலிமற்
றவன்வலியாற்றொலைதலானே." (அ)
என்று கூறினர் தமியேனாசிரியர் வடகோவை-ஸ்ரீ சபாபதி நாவலரவர்களும்.

போக, கர்த்தர் ஓய்வு நாளில் வேலை செய்ததற்காக அவனைக் கல்லாலெறிந்து கொல்லச்சொன்னார். அப்படியே அவர்கள் கொன்றார்கள். [யாத்திரை. 32: 27, 28.] கன்றுக்குட்டியைப் பூசித்ததனிமித்தம் ஒவ்வொருவனும் தன் தன் சகோதரனையும், சினேகிதனையும் கொன்று போடும்படி கர்த்தர் சொன்னதாய் மோசே சொல்ல, லேவியன் புத்திரர் 3,000 பேரைக் கொன்றார்கள். (இதற்கு முதன்மையான ஆரோனென்பவன் மோசேயின் சகோதரனானதால் அவனைமாத்திரம் கொல்லவில்லை.) பின்பு ஷெ ஆரோன் குருவாகவும் நியமிக்கப்பட்டான். [லேவியர். 24: 10—16.] ஒரு சிறுவன் தேவதூஷணம் செய்ததற்காகக் கர்த்தர் அவனைக் கல்லா லெறிந்து கொல்லச்சொன்னார். அவ்வாறே கொன்றார்கள். [யாத்திரை. 4: 24—26.] (கடவுள்) விருத்தசேதனம் செய்யாத ஒருவனை ஒளித்திருந்து கொல்லப்பார்த்தார். அவன் விருத்தசேதனம் செய்தபின் அவனை விட்டிட்டுப் போயினார். (இதனால் கடவுள் இரக்கமும் ஜீவகாருணியமும் இல்லாதவரென வெளியாகின்றது.)

[உபாகமம். 14: 21.] தானாய்ச்செத்த எந்த மிருகத்தையும் நீங்கள் புசியாதேயுங்கள்; உங்கள் வாசலிலிருக்கிற பரதேசிகளுக்குப் புசிக்கக்கொடுக்கலாம்; அல்லது அன்னியனுக்கு விற்றுப்போடலாம்.

[லேவி. 25: 44-46.] உனது அடிமைகள் புறஜாதிகளா யிருக்கவேண்டும். பரதேசிகளுடைய புத்திரர்க

ளேயும் அவர்கள் சந்ததிகளேயும் நீங்களும் உங்கள் சந்ததியாரும் என்றென்றைக்கும் அடிமைகளாகக் கொள்ளவேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரராகிய உங்கள் சகோதரரில் ஒருவரை யொருவர் கொடூரமாய் ஆளவேண்டாம். (இதனால் கடவுள் பக்ஷபாத முடையவரென்றும் நியாயம் தெரியாதவரென்றும் அறிகிறோம்.)

[யாத்திரை. 21: 20, 21.] ஒருவன் தன் அடிமையைக் கோலாலடித்துக் கொன்றால் பழிக்குப்பழி வாங்கவேண்டும். ஒருநாள் அல்லது இரண்டுநாள் அப்படி அடித்துக் கொல்வானாகில் பழி வாங்க வேண்டாம் ஏனெனில்அவன்அவனது உடைமை.(இதனால் கிறிஸ்தவர் சொல்லும் ஏகோவா என்னும் கடவுள் குரூர முடையவரெனப் புலப்படுகின்றது.)

[உபாகமம். 21: 18-21.] தாய்தந்தைசொல் கேளாமலும் கீழ்ப்படியாமலும் இருக்கிற பிள்ளையை (அதை தாய்தந்தையர்) மூப்பரிடத்தில் கொண்டுபோய் இவன் பெருந்தீனிக்காரனும் குடியனுமா யிருக்கிறான் என்று (இல்லாததைச்)சொல்லவேண்டும்; எல்லாரும்அவனைக் கல்லாலெறிந்து கொல்லக்கடவர்கள்.(பைபிலில்) பிரதிபாதிக்கும் கர்த்தராகிய ஏகோவா என்னும் கடவுளுக்குப் பொய்யும் கொலையும் வாழைப்பழம் சாப்பிடுவது போலாக்கும். "புறந்தூய்மை நீரானமையும், அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்னும் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளின்படியே

பைபிற் கடவுளுக்கு மனமானது பரிசுத்தமில்லையென்றறிக.)

[யாத்திரை. 3 : 21, 22.] நீங்கள் போகும்போது வெறுமையாய்ப்போவதில்லை. ஒவ்வொரு ஸ்திரீயும் தன் அயலகத்தாளிடத்திலும், தன் தன் வீட்டில் தங்குகிறவளிடத்திலும் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள். அவைகளை உங்கள் குருமாருக்கும் உங்கள் குமாரத்திகளுக்கும் தரிப்பித்து எகிப்தியரைக் கொள்ளையிடுவீர்களென்றார். (ஷை 11-ம் அத்தியாயம்.) அப்படியே செய்தார்கள். ஞானத்தாயான ஔவையார் அருளிச்செய்த "கொள்ளைவிரும்பேல்" என்னும் சிறு நீதிவாக்கியத்தையும் பைபிற் கடவுள் அறிந்திலர்போலும்.

[மல்கியா. 2: 3.] "இதோ நான் உங்களுடைய பயிரைக்கெடுத்து உங்கள் பண்டிகைகளில் சாணியை உங்கள் முகங்களி லிறைப்பேன்" என்று கடவுள்சொன்னார். [எசேக்கியேல். 4: 12—15.] அதை வாற்கோதுமை அடையைப்போலச் சாப்பிடுவாயாக : அது மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் (மலம்) வரட்டிகளால் அவர்கள் கண்ணுக்குமுன்பாகச்சுடப்படுவதாக என்று கடவுள் சொன்னார். [எசாயா. 3 : 17.] ஆதலால் ஆண்டவர் சீயோன் குமாரத்திகளின் உச்சந்தலையை மொட்டையாக்குவார்; கர்த்தர் அவர்கள் மானத்தைக் குலைப்பார். [எசாயா. 36: 12.] அதற்கு ரப்சாக்கே உங்களோடேகூடத் தங்கள் மலத்தைத் தின்னவும் தங்கள்

நீரை (மூத்திரம்) குடிக்கவும் அலங்கத்திலே தங்கி யிருக்கிற புருஷரண்டைக்கே யல்லாமல், உன் ஆண்டவ னண்டைக்கும், உன்னண்டைக்குமா என்னாண்டவன் இந்த வார்த்தைகளைப்பேச என்னை அனுப்பினார் என்று சொல்லி, [ஏசாயா. 47: 1—3.] கன்னிகையே உன் முக் காட்டை நீக்கிவிடு; வெறுங்காலும் அம்மணத் தொ டையுமாய் ஆறுகளைக் கடந்துபோ; உன் நிருவாணம் வெளிப்படும்; உன் இலச்சை காணப்படும்; நான் ஒரு வனையும் பாராமற் சரிக்கட்டுவேன் (என்று கர்த்தர் சொன்னார்.) [ஓசியா. 1:2.] கர்த்தர் ஓசியாவைநோக்கி, நீபோய் ஒரு சோர ஸ்திரீயையும் சோரப்பிள்ளையை யும் உன்னிடம் சேர்த்துக்கொள்; [நாகூம். 3: 4—6.] தன் வேசித்தனத்தினால் சாதிகளையும் தன் சூனியங்களி னால் வம்சங்களையும் விற்கிற மகாசூனியக்காரியும் ரூப வதியுமாயிருக்கிற வேசியினுடைய திரளான வேசித் தனங்களினிமித்தம் இதோ நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்தின் ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிருவாணத்தையும் இராச்சியங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண் ணி, உன்மேல் தீட்டானவைகளை எறிந்து, உன்னைக் கனவீனப்படுத்தி வேடிக்கையாக்கிப் போடுவேன் என் று சேனைகளின் கர்த்தர் சொல்லுகின்றார். ("ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய—வழுக்கியும் வாயாற் சொலல்" என்னும் திருக்குறட்பொருளையும் அறிந்தா ரல்லர். அன்றி, அபலையான ஸ்திரீசாதிகளை அவமானப் படுத்துவதுங் கிறிஸ்தவருடைய தேவனுக்குத் தரும மாமோ!)

பைபிலென்னும் புத்தகத்தில் இவ்வாறு அளவற்ற அயோக்கியமான வாக்கியங்க ளிருக்கின்றன. இப்படிப் பட்ட துர்க்குணமுள்ளவரைத்தான் பாதிரிமார் கடவு ளென வெகு பெருமையாய்ப் பேசுகின்றார்கள். இவ் வண்ணமான குற்றங்க ளெவ்வள வெடுத்துச் சொன் னாலும் பாதிரிமார் லட்சியஞ் செய்யாமல் நம்மைக் கிறிஸ்தவராக்கப் பிரயத்தனஞ் செய்தல் நன்றாகுமா?

## ரு-ம் இயல். பைபிலின் உலகசிருட்டி மறுதலை.

எங்கும் பரிபூரணமாய் நிறைந்துள்ள ஈஸ்வரன், அநாதியே மலத்தில் கட்டுண்டுகிடந்த ஜீவர்களைக் கருணையினால் வெளிப்படுத்தி முத்திக்கு வழிகாட்டும் வேதாகம சாஸ்திரங்களை யீந்து, பத்தியோக ஞானங் களையுண்டாக்கி, அஞ்ஞானத்தைப் போக்கி, நிரதிசயா னந்த மோட்சத்தை யளிக்கும்பொருட்டே காணப் படும் இவ்வசேதன உலகத்தைச் சிருஷ்டித்தார். இத னால் ஈஸ்வரன் † தம் பொருட் டன்று, ஜீவர்கள்

† தம்பொருட்டெனவே, தம் பிரயோசனத்தின்பொருட் டுப் படைத்தாரென்றாகிக் கிறிஸ்தவர்கள் கூற்று அசங்கத மாகும். இது ஏகமத சங்கற்ப நிராகரணத்திலுள்ள

"பிள்ளைக்கோர்விளையாட்டுச்சிற்றெலிக்குப்
பிராணவிமோசனமென்றாங்கும்
வள்ளற்கோர்விளையாட்டுப்படைத்தலைக்குஞ்
செயலந்தோமற்றதான்ம
கொள்ளைக்கோபெருந்துயரக்கடற்படிவா
மடவோனேகோதார்கோளீ
தெள்ளற்கேயிடனுக்கட்டிவிடும்புரட்டென்றிங்
கியார்தாஞ்சொல்வார்."

என்னும் செய்யுளானு நன்கு விளங்கும்.

பொருட்டே கருணையால் உலகைச் சிருஷ்டித்தாரென வெளியாகின்றது. இனிக் கிறிஸ்தவர் கூறும் உலக சிருஷ்டி யெவர்பொருட்டென ஆராய்வாம் :—

* ௫௮௯௪-வருஷங்களுக்கு முன் ஏகோவா என்னும் கடவுள் சிருஷ்டித்ததாய்க் கூறும் உலகானது தன் பொருட்டுச் சிருஷ்டிக்கப்பட்டதா? பிறர்பொருட்டுச் சிருஷ்டிக்கப்பட்டதா? உலகைச் சிருஷ்டித்ததற்குமுன் பிறர்க ளில்லையென்பது கிறிஸ்தவர்க்கே யுடன்பாடான மையால் பிறர்பொருட்டுப் படைத்தாரென் றுரைத்த லமையாது. அமையாதாகவே, தன்பொருட்டுப் படைத்தாரென்றே சொல்லவேண்டியதாம். இவ்வாறே பைபிளும் (ஏசாயா.43:7) "நாம் நம்முடைய மகிமைக்கென்று சிருஷ்டித்துப் படைத்த யாவையுங் கொண்டுவா." என்று கூறுகின்றது.

ஜெ ஏகோவா என்னும் கடவுள் ஆதியிலே பகுத்தறிவில்லாமல் மிருகங்களைப்போல இரண்டு மனுஷர்களைப் படைத்து, அவர்கள் தம் கட்டளையை மீறினார்களென்றறிந்து பாவியாகக் கடவர்களெனச் சபித்தனர்.

---

* நமது இந்துமத சித்தாந்தம் இவ்வுலக சிருட்டியாகி (௧௯௫,௫௮,௮௫,00௩) நூற்றுத்தொண்ணூற்றைந்துகோடியே, ஐம்பத்தெட்டிலக்ஷத்து, எண்பத்தையாயிரத்துமூன்றுவருஷங்களாகின்றனவென்று கூறுதற்குச் சார்பாக, ஐரோப்பிய பிரபல தத்துவசாஸ்திரிகளுள் லார்ட் கெல்வின் முதலியவர்களுஞ்சிருட்டியாதி வருஷங்களைப் பலகோடிக்கணக்காய்க் கணித்திருக்கின்றனர்.

அந்தப் பாவம் அவர்களைப் பிடித்ததோடு போகாமல் அவர்கள் சந்ததிகளான பின்வந்தவர்களையுந் தொடர்ந்ததாம். பாவிகளுண்டானமையால் அவர்களை இரட்சிக்க இரட்சிப்பும் வேண்டப்பட்டது. இரட்சிப்புக்காகவே பைபிளென்னும்புத்தகமும்தரப்பட்டது.* பைபிளின்படி நடந்தவர்களுக்கு நித்தியமுத்தியும், நடவாதவர்களுக்கு நித்திய நரகமு நியமிக்கப்பட்டன. இப்படிச் செய்வதனால் ஏகோவாவுக்கு மகிமையுண்டாய் ஆனந்தமுண்டாகின்றது. இதனால் ஏகோவா என்பவர் சீவர்கள் தமது மகிமையை யறிந்து தமக்குப் பயந்து தம்மைப் புகழ்ந்து வணங்கச்செய்து, அதனால் தமது மகிமையை விளக்க வேண்டியே படைத்தார் என்பது விளங்குகின்றது. ஏகோவா என்பவர் தமது மகிமை விளங்கு நிமித்தமே உலகைப்படைத்தார் என்று சொல்லவே, சிருஷ்டிக்கு

---

* இதுபற்றி ஏசுமதசங்கற்ப நிராகரணம்,

"உன்னிறைவனுணைவழிவாராரை
யருநரகினுய்த் திட்டென்று
மின்னல்புரிவானென்கையேலாதா
மெறிதிரைசூழ்த்தபாரின்
மன்னவர்தந்தையர்குடிகண்மக்களற
நெறியின்கண்வாரார்தீமை
துன்னுவினைசெயினருளான்வினைக்கேற்ப
வொறுத்தருளே துறுத்தலுங்காண்."

எனக் கூறுதலானு முணர்க.

முன் அவருடைய மகிமை விளங்காதிருந்ததென்றும், இது அவருக்கு ஓர் குறையா யிருந்ததென்றும், அக்குறையை நீக்கக் கருதியே உலகைச் சிருஷ்டித்தா ரென்றும் பெறப்படுகின்றன. அப்படியல்ல, அவரது மகிமை முன்பே அவரிடத்திலேயே குறைவின்றி விள ங்கியிருந்ததெனின், குறைவின்றி விளங்கியிருந்த தொ ன்றினை மறுபடியும் விளக்குதல் குற்றமாம். அதனைச் சீவர்களுக்கு விளக்கப் புகுந்தாரெனின், அதுவும் தன் பொருட்டேயாகலின் முன் சொல்லிய குற்றமே யுண் டாகின்றது. சீவர்கள் நிமித்தமே சீவர்களுக்கு விளக் கப் புகுந்தாரெனின் சிருஷ்டிக்குமுன் சீவர்களில்லா மையால் சீவர்கள் நிமித்தமென்று கூறுதல் பொருந் தாது. பின்னுல் சிருஷ்டிக்கவேண்டிய சீவர்களுக்குத் தமது மகிமை விளங்கவேண்டியே அவ்வாறு செய் தனரெனின் சிருஷ்டித்தல் தம்மை மகிமைப்படுத்தும் பொருட்டும், தம்மை மகிமைப்படுத்துதல் சிருஷ்டிக் கும்பொருட்டுமென்றுகி அந்நியோந்நியாஸ்ரய (ஒன் றனை யொன்றுபற்றல்) தோஷத்திற் கிடமாகின்றது. அவ ரது மகிமை சிருஷ்டிக்குமுன்பே குறைவின்றி விளங்கி யிருந்ததே யாயினும் அதனை அநுபவிப்பா ரில்லாமை யால் அது பயன்படாது சும்மாகிடந்தது; அதனை அநுபவிக்கும்பொருட்டுப் பின்பு சீவர்களைப் படைத் தார் எனின், ஏகோவாவென்னுங் கடவுள் தமதுமகிமை யைத் தாமே அநுபவித்திருந்தா ராகலின் அநுபவிப் பா ரின்றிச் சும்மாகிடந்ததென்பது கூடாது. சிருஷ்

டிக்குமுன் சீவர்க ளில்லாமையால் சீவர்கள் தமது மகிமையை அநுபவிக்கச்செய்ய வேண்டுவதில்லை. அநுபவிக்கச்செய்ய வேண்டுமாயின் அநுபவிக்கச்செய்ய வேண்டுவது சிருஷ்டிக்கும் பொருட்டும், சிருட்டிக்க வேண்டுவது அநுபவிக்கச்செய்யும் பொருட்டுமென்ருகி, முன்போல அந்நியோந்நியாஸ்ரய (ஒன்றினையொன்று பற்றல்) தோஷத்திற் கிடனும். எவ்வகையாகப் பார்க்கினும் தமது மகிமையை விளக்காதிருப்பது அவர்க்குக் குறையே யாகும். அக்குறை சிருஷ்டிக்கு முன் இல்லாத சீவர்கள்மேல் சாராது; சிருஷ்டிக்கு முன்னுள்ள ஏகோவாவின் பேரிலேயே சாரும். இதனல் துணியப்படுவது யாதெனின் ஏகோவா தமது மகிமை விளங்காதிருந்தமைபற்றிக் குறையுடையராயிருந்தாரென்பதாம். *குறையுடையராயிருந்தாரென்று சொல்லவே, அதற்கு எதிர்மறையான நிறை வில்லாதவரா யிருந்தாரென்பதும் பெறப்படுகின்றது. அதோடு தமக்குள்ள குறையைப்பற்றி வியாகூலங்கொண்டிருப்பாரென்றும் விளங்குகின்றது. இதனல் இன்பமில்லாதவரென்றும், இன்பமில்லாமையால் அதனைப் பெறுங்

---

* "குலமிலான் குணங்குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான் றனக்கென்னவோர் பற்றிலான் பொருந்து
மிலமிலான் மைந்தர் மனைவியிலானெனவனவன் சஞ்
சலமிலான் முத்திதரும்பரசிவனெனத் தகுமே."

என ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் கடவுளிலக்கணங் கூறினர்.

பொருட்டு உலகைச் சிருஷ்டிக்க விரும்பினுரென்றும், தமக்கு இன்பஞ் செய்துகொள்ளும் விஷயத்தில் காமமும், துன்பஞ் செய்துகொள்ளும் விஷயத்தில் வெகுளியும், அவ்விரண்டின் வாயிலாக மயக்கமு முடையாரென்றும் விளங்குகின்றன. காமம் வெகுளி மயக்கமென்னும் முக்குற்றங்களுள்ள யகோவா வென்பவர், அநாதியே தம்மிடத்திலுள்ள இக்குறையை நீக்கும் உபாயம் அறிந்திலராகலின் அநாதி அறிவிலரென்பதும், அநாதியேசிருஷ்டியாகியகிருத்தியஞ் செய்யாமையால் அநாதிகர்த்திருத்துவ மில்லாதவர் என்பதும், அநாதியே கர்த்திருத்துவம் இல்லாதிருந்து சிலகாலத்திற்குமுன் கர்த்திருத்துவ மடைந்து கிருத்தியத்தில் முயன்முராகலின், அவரடைந்த கர்த்திருத்துவமானது முன்னில்லாதிருந்து பின்னுளதாகிய காரியலட்சண முடையதாதல்பற்றி அது வேறொரு கர்த்தாவால் பெறப்படுதலால் சுவதந்திரமின்றிப் பரதந்திரமுடையர் என்பதும், அநாதியேயன்றி இடையிலே குறைவோடு கூடிய கிஞ்சித் கர்த்திருத்துவம் அடைந்து தன்மை வேறுபடுதலின் விகாரத்துவமுடையார் என்பதும், விகாரமுடைமையாலும் குறைவுடைமையாலும் அநாதி நித்திய வியாபகத்துவமில்லாதவரென்பதும், தமது சுகத்தின்பொருட்டுத் தாமே பாவம் விளைதற்கேதுவான காரியஞ்செய்து பல ஜீவர்களை நித்தியகாலம் தண்டிக்க முயன்றமையாலே நியாயமும் இரக்கமும் நன்மையும் இல்லாதவர் என்பதும், சீவர்களுள்ளே

தம்மை நித்தியம் உபசரிக்கத்தக்கவர் இன்னுரென்பதை ஞானத்தால் அறியமாட்டாது அவர்களைப் பாவிகளாக்கிப் பூமியிலிருந்து நீதியற்ற விதிகளைக்கொடுத்துப் பரீட்சைசெய்து அறிகின்றாராகலின் முற்றறிவில்லாதவர் என்பதும், சீவர்க்குப் பாவமும் துக்கமுமுண்டாக்காது தம்மை உபசரித்துக்கொள்ளவும் தமக்குச் சுகத்தையுண்டாக்கிக்கொள்ளவும் கூடாமையால், சர்வவல்லமை இல்லாதவர் என்பதும் பெறப்படுகின்றன. ஆதலால் ஏகோவா என்பவர் ஜீவர்களி லொருவரே யன்றிக் கடவுளல்லர் என்பதாம்.

கிறிஸ்தவர் சொல்லுகிறபடி உலகசிருஷ்டி கூறுவதில் இவ்வள வனர்த்தங்கட் கிடமாகின்றது. இந்துமதத்தில் இப்படிப்பட்ட ஆக்ஷேபங்களில்லையென முன்னரேயுரைத்தேம். நிராக்ஷேபமாயுள்ள இப்படிப்பட்ட மதத்திற் பிறந்தும் ஆக்ஷேபமுள்ள அந்நியமதத்திற் செல்வது புத்தியீனமல்லவா?

## கூ-ம் இயல். பைபிலின் தெய்வசித்த மறுதலை.

சீவர்களின் கர்மானுசாரமாகச் செய்யுஞ் சிருட்டியின் றொடக்கத்தில் சராசரப் பொருள்களை விஷயிகரிக்கும் பரமேசுவரனது ஞானம், சங்காரகாலவரையும் மாறுதலிலவாந் தன்மையினை யுடைத்தாயிருக்கின்றது; அங்ஙனமே அவனது இச்சாகிரியைகளுமாம், அவ்வாற்றாற்றான் சர்வபூதங்களும் தத்தநிலைமையிற் றவறு திருக்கின்றன. திருஷ்டாந்தமாக, தீ வெப்பத்தைத் தரு

கின்றது; சூரியன் ஒளியைத் தருகின்றான்; மேகமுங் காற்றும் மரணமும் இடையீடின்றிச் சஞ்சரிக்கின்றன. இந் நியம வரம்புக ளுணரப்பெறுக் கிறிஸ்தவர்கள் தங்கள் தெய்வசங்கற்பத்தை ( காமவெகுளி மயக்கத்தான் ) மொத்துண் டலமருஞ் சீவர்களின் சங்கற்பத்துக்குங் கீழாயதாக வைத்துக் கூறுவது தகுதியுடைத்தாகுமா? அவர்கள் * அளவைகட்கும் † பொருந்து மாற்றிற்கு மொருசிறிதும் பொருந்துதலிலாத பைபில் என்னும் புத்தகத்தை வேதமெனக் கொண்டு கடவுளுடைய சித்தம் இன்னதென்று காட்டுகிற மார்க்கம் வேதமெனப்படும் என்கின்றார்கள். அஃது உண்மையாளல், கடவுளுடைய சித்தமெல்லாம் அவ்வேதத்தில் அடங்கிற்றென்பது துணிபாதல் வேண்டும். அத்திமரத்தை ஏன் சபித்தார், பன்றிகளிடத்திலே ‡ பசாசுகளைப் போய் அடையுமாறு ஏன் செய்தார், பிரயோசன மில்லாத வஸ்துக்களை ஏன் படைத்தார், என்று இந்துக்கள் கேட்டால், அது தேவ ரகசியம் அது அவருடைய சித்தம், வேதத்திலே சொல்

---

* பிரத்தியக்ஷ அனுமானாதி பிரமாணங்கள். † யுக்தி.

‡ பைபிலில் பசாசின் சிருஷ்டியைப்பற்றி யாதுங் கூறப்படாமையானும், அது ஏகோவா, கிறிஸ்து என்பாரையு மிக் கலமரச் செய்தமையானும் அது அப்பைபிற் சிருஷ்டியுள் அடங்கிற்றில யென்பதுமினிது விளங்குகின்றதல்லவா?

லப்படவில்லை என்று கிறிஸ்தவர் சொல்வதென்னை? ஆதலின் அவ்வாக்கியமும் அபத்தமாமென்க.

இன்னும் வேதமென்னும் பதம் அறிவைத் தருவதாகிய ஒரு நூல் என்று பொருள் தந்து ஆரியருடைய சமயநூலாகிய வேதத்துக்கே பெயராகி நிற்பதாகவும், கிறிஸ்தவருடைய சமய நூலுக்குப் பைபில் என்னும் பெயர் புத்தகமென்றுமாத்திரம் அருத்தந்தரும் பிபிலோ என்னும் கிரேக்கபதத்திலிருந்து வந்ததாதலின், வேதமென்று கூறுவது பித்தளையைத் தங்கமென்று கூறி விற்கும் சூதர் செய்கையாம்; ஆதலின் வேதமென்று பைபிலைச் சொல்லாதொழிக.

எகோவா தமது சித்தத்தைத் தாமே வெளிப்படுத்தினர் என்பதற்குப் போதிய சாக்ஷியம் யாதுமில்லை; ஆதலின் அதுவும் பொருந்தாதென்க.

எ-ம் இயல். ஏசுவின் * தீர்க்கதரிசன மறுதலை.

பின்னர் நிகழற்பாலவாய சம்பவங்களைச் செவ்வனே யோகக்காட்சியான் முன்ன ரறிந்துரைத்தலைத் தீர்க்கதரிசன மென்று கூறுவர் அறிஞர். பைபில் கூறும் தீர்க்கதரிசனமோ அர்த்த நிச்சயம் பண்ணற்கமையாத மயக்க வாக்கியங்களான் அமைந்து கிடத்தலின், அது எவ்வாற்றானுமொவ்வற்பாலதன்றாம்; எங்ஙனமெனின், இன்னகாலத்திலே, இன்னதேசத்திலே, இன்ன குடியிலே, இன்ன சின்னங்களோடு, இன்னபடியாகப் பிறப்

* தீர்க்கம்=நீட்சி, தரிசனம் - காணல்.

பார் ஏசு என்ற தீர்க்க தரிசனம் பைபிலில் யாண்டு மிலதென்க. மற்றைய தீர்க்க தரிசனங்களு மிங்ஙனமே முன்னொடுபின் முரணி யொன்றாயினுந் துணிதற்கிட னின்றிக் கிடக்கின்றன. ஏசு பிறந்தா ரெனப் பிறசாட் சியங்களாயினுமுண்டா? அவையுமிலவே. ஏரோதரசன் காலத்துச் சரித்திரங்களை யெல்லாம் திட்பநுட்பமாக வரைந்த யோசிபாஸ் என்னும் மகா இதிகாசகாரர், ஏசுபிறந்தார், இன்ன அற்புதங்களைச் செய்தார், புதி தாக ஒரு நக்ஷத்திரங் காணப்பட்டது, பூமிநடுங்கிற்று, சூரியன் ஒளி மழுங்கிற்று என்பவை முதலிய விஷயங் களை எழுதாது விடாரென்க.

## அ-ம் இயல். ஏசு பாவமன்னிப்பின் மறுதலை.

ஒருவன் தான் செய்த தவறுகளை யுணர்ந்து பச்சாத் தாபப்பட்டுத் தக்கோரையடுத்து அவர் கூறும் பிராயச் சித்தத்துக் குட்பட்டு ஒழுகுவனாயின், அவனது தவ றுக ளொழியு மென்பதும், அவன் அடுத்துவரும் ஜன் மங்களில் சரியையாதிகளினூனே ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை யடைவானென்பதும் நமது சாஸ்திர சம் மதமாகவும்,முன்னும் பின்னும் ஜன்மத்தொடரையொ ப்பாத கிறிஸ்தவர்களெவ்வளவு பாவஞ்செய்யினும் கிறி ஸ்துமூலமாகத் தங்களுக்குப் பாவமன்னிப்புக் கிடை த்து மோக்ஷமுண்டாகுமென நம்புவது மிகவும் அசங் கத மாகும்.

கடவுள் பிசகாத நீதி யுடையவரென்பது, கிறிஸ் தவர்க்கும் ஒத்த வுடன்பாடன்றோ? பிசகாத நீதியை

யுடைய கடவுள் பாவ மன்னிப்புக் குடன்படமாட்டார். குற்றம் தண்டிக்கப்பட்ட வழியன்றித் தீராது. மன்னித்தல் கடவுளுக்கு ஏற்ற செய்கை யன்று. நன்மை செய்தவன் நன்மையையும் தீமை செய்தவன் தீமையையு மனுபவிப்பானென்பது கிறிஸ்துவுக்கும் ஒத்த சித்தாந்தமன்றோ? மன்னித்தலாவது ஒருவன் தனக்குப் பிறனால் வந்த துன்பத்தைப் பிரதிபாதகம் பண்ணாது சகித்துக்கொள்ளுதலாம். மனுஷர் கடவுளுக்கு நன்மையாவது தீமையாவது செய்ய வல்லுநரல்லர். மனுஷரிடத்துக் கடவுள் நன்மை தீமைகளைப் பெறுபவராயின் மனுஷரிற் றாழ்ந்தவராதல் வேண்டும். மனுஷர் கடவுளுக்குத் துன்பஞ்செய்யும் வலிமையுடையராய வழியன்றோ அவரை மன்னிப்புக் கேட்டலும் அக்கடவுள் மன்னித்தலும் தகும். எல்லா வீரமும் எல்லா நலமும் பொருந்திய கடவுளுக்கு நரப்புழுக்கள் துன்பமும் இன்பமும் செய்யப் புகுவது கூடாதகாரியமன்றோ? அங்ஙனமாகவும், ஒருவன் பிறருக்கும் பிறவுயிர்களுக்கும் செய்கின்ற துன்பங்களா லுண்டாகும் பாவங்களைக் கடவுள் மன்னித்தற்கு எப்படி அதிகாரியாவார்? மன்னித்தல் வாதிக்குரிய செய்கையன்றி நீதிபதிக்குரிய செய்கை யன்று. துன்பஞ் செய்தவன் துன்பத்தை யடைந்தவன் என்னும் இருவரில் துன்பஞ் செய்தவனைக் கடவுளாகிய நீதிபதி துன்பத்தை யடைந்தவனுடைய சமாதானமின்றிமன்னித்து விடுவாரானால் துன்பத்தை யடைந்தவனுக்கு அநீதி செய்தவராவா

ரன்றோ? ஆதலின், மெய்க்கடவுளுக்கு மன்னித்தற் றொழில் இலக்கணமாகாது. ஆகவே * மன்னிப்புக்கிடைக்குமென்று வீணே நம்பிப் பாதகங்களைச் செய்து திரிபவராகிய பாதிரிகளும் அவரைச் சார்ந்தோரும் தித்திக்கு மென்று நம்பி எட்டிக்கனி தின்பவர்போல் அவமே வருந்துவர் என்பது நிச்சயம்.

இன்னும் கிறிஸ்தவக் கடவுளது மன்னிப்பைப் பார்க்குமிடத்து அதுவும் நரபலிமேல் மன்னிப்பாகின்றது. உலகத்திலொருவன் தனக்குத் துன்பஞ் செய்த ஒருவனது குற்றத்தை யாதொருபயனும் பெறாது மன்னிப்பான். கிறிஸ்தவக் கடவுளோ நரபலியாகிய பரிதானம் (லஞ்சம்) பெற்றுத் தமது கோபாவேசத்தைத் தணித்துக்கொண்டே மன்னிப்பவராயினர். இவ் வவலக்ஷணமா தெய்வலக்ஷணம்! தமக்குத் துன்பஞ்செய்யாத மனுஷருடைய பாவத்துக்குச் சினந்தெரிந்ததும், அச்சினத்தைத் தவிர்க்க மன்னிப்புவேண்டாத மனுஷருக்

* "பேயின்வசமழிந்தே யுன்விதி கடந்தேன்
பெரியோனே யென்னும்பெற்றி
யாயினறி வில்லாத வடியனேன்
பிழைபொறுத்திட்டருள்வாய் கல்லாச்
சேயினுறுபிழை பொறுக்குந் தாயினெனக்
குறிப்பித்தநேற்றவிவைக்
காய்தலையே மேற்கொண்டவன்கணனோ
பிழைபொறுத்தாள் கருணைவள்ளல்."
(ஏசுமத சங்கற்ப நிராகரணம்)

காக வசு நரபலியானதும், அதனால் உலகம் இரக்ஷிக்கப் பட்டதும் நோக்குமிடத்து, குயவன் செய்த குற்றத் தைக் கோமுட்டி கழுவேற நரிகள் பசிதணிந்து மன் னித்த கதைபோலாமென்க. இதனுள்ளுரை றயைப் பார் க்குமிடத்து ஆட்டுப் பலி, மாட்டுப்பலி, நரபலி விரும்புத லால் ஏகோவா பைசாசமாகின்றார். பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற முறையை ஒட்டிப்பார்க்கு மிடத்து வசு குட்டிப் பைசாசாகின்றார். பரிசுத்தாவியானவர் ஏவற் பைசாசாகின்றார். இதனால் ஞானோதயம் ௧௮-ம் பக்கத்திலே மும்மூர்த்திகளை நரகப் பேய்கள் என்று கூறியது இந்தப் பிதா, குமாரன், ஆவியாகிய மும்மூர் த்திகளையேயாமென்று கொள்ளக்கடவர்.

மேலும், இக் கிறிஸ்தவர்கள் ஜன்மாந்தரங்களை யொப்பாமை காரணமாகப் பாவ மன்னிப்பை யொப் பிப் பற்பல வாசங்கைகட் குள்ளாகி யிடர்ப்படுகின்றார் களன்றோ? ஜன்மாந்தரங்களை யொப்பின் அத்தகைய எவ்வகை யாசங்கைகட்கு மிடமு யிடர்ப்படாரென் பது பின்வரு மியலா லினிது விளங்கும்.

### ௩-ம் இயல். ஜன்மாந்தர மின்றென்பதன் மறுதலை.

இந்த ஜன்மத்தில் அவரவர் பெற்றிருக்கும் செல் வம் தரித்திரம் இவை வந்தவா றெப்படி யென்று பார்ப்போமானால், சிலர் அவரவர் முயற்சி முயற்சியின் மை யென்று சொல்லுகின்றார்கள். முயற்சி முயற்சி யின்மைக்குக் காரணம் யாதெனின் புத்தி நுட்பமும்

அஃதில்லாமையு மென்றும், அதற்குக்காரணம் யாதெனின் சரீர கருமமென்றும், அதற்குக்காரணம் யாதெனின் மாதா பிதாக்கள் சரீரங்களென்றும், அதற்குக் காரணம்யாதெனின்அவர்கள் மாதா பிதாக்கள்சரீரங்களென்றும், அதற்குக் காரணம் யாதெனின் அவர்கள் மாதா பிதாக்கள் சரீரங்களென்றும் இப்படி முடிவில்லாமை யென்னுந் தோஷமுண்டாகச் சொல்லுகின்றார்கள். இவ்வாறு எவ்வளவுதூரம் போனாலும் முடிவில் கடவுள்செயலென்றே ஆஸ்திகராயுள்ள ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அப்படியானால் *ஒருவனைச்செல்வனாகவும் ஒருவனைத் தரித்திரனாகவும் அவர் ஏன் செய்தாரென்னுங் கேள்வி பிறக்கின்றது; கடவுள் ஜீவகாருணியரு நடுவு நிலைமை யுள்ளவருமாகையால் அவர் பாரபக்ஷமாய் ஏற்றக் குறைச்சலைச் செய்யமாட்டார். இந்த ஜன்மத்தில் அவரவர் செய்த நன்மை தீமைகள் காரணமாகச் செல்வமும் தரித்திரமும் தந்தா ரென்னில், சக்கரவர்த்தி வீட்டிற் பிறந்த

* "சில்லோரைக் குருடராச் சில்லோரைச்
செவிடராச் சில்லோர் தம்மை
நல்லோராச் சில்லோரைத் தீயோராச்
சில்லோரை நலமார் செல்வ
மில்லோராச் சில்லோரை யுள்ளோராச்
சில்லோரை யெழிலோ ராகக்
கல்லோராச் சில்லோரை யறிஞராச்
சில்லோரைக் காண லென்றே."

(ஏகமத சங்கற்ப நிராகரணம்.)

குழந்தைமேலான சுகத்தை அநுபவித்தற்கும், தோட்டி வீட்டிற் பிறந்த குழந்தை தாழ்மையான துக்கத்தை அநுபவித்தற்கும் இந்த ஜன்மத்தில் யாதுகாரணம்? அப்போது பிறந்த குழந்தைகள் இரண்டில் ஒன்று நோயின்றிச் சுகமும், ஒன்று நோய் பெற்றுத் துக்கமும் அநுபவிக்கின்றனவே. இவைகளுக் கெல்லாம் என்ன சமாதானம்? இந்த ஜன்மத்தில் ௨ குழந்தைகள் யாதொரு நன்மை தீமைகளும் செய்யவில்லையே. குயவன் பல பாண்டங்களைச் செய்யும்போது சில ஒழுங்காகவும், சில கோணலாகவும் போகவில்லையா? அதுபோல் ஒன்று வியாதியாகவும், ஒன்று வியாதியில்லாததாகவும் ஜன்மிக்கின்றனவென்னில், குயவன் எல்லாப் பாண்டங்களையும் ஒழுங்காக வனையவேண்டுமென்றுதான் நினைத்தான். அவன் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையனாதலின் அவன் எண்ணத்துக்கு மாறாக அவை அமைந்தன. அப்படியே கடவுளைச் சொல்வோமாயின் அவருஞ் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையவரெனவே யுரைக்கவேண்டி வரும். கடவு ளிஷ்டப்படி கொடுத்தாரெனின், அவர்க் கிஷ்டமுண்டானது நியாயங் காரணமாகவா? அநியாயங் காரணமாகவா? நியாய விரோதமா யிருப்பதால் நியாயங் காரணமென்று கூறுதற் கிடமில்லை; அநியாயங் காரணமாவெனின் கடவுளுக்கு அநியாயங் கற்பிப்பது கூடாது. பின்னையாதெனின் அவரவர் பூர்வ கர்மத்துக் கேற்பக் கொடுத்தாரென்பதே நியாயமாம். நாமிப்போது அநுபவிப்பது

நமது பூர்வஜன்மத்தின் கருமபலனைக்கடவுள் கொடுத்திராவிடில் நாம் இப்போது சற்கருமங்களைச் செய்வதனால் யாது பயன்? செல்வதரித்திரங்களைக் கொடுத்தற்குச் சிலர் வேறு காரணமுங் கூறுகின்றார்கள். அஃதாவது: செல்வனாயிருப்பவனுக்கு அச்செல்வங் கொடாவிடில் அவன் பெருந்தீங்கு செய்வானென்றும், தரித்திரனாயிருப்பவனுக்கு அத் தரித்திரங் கொடாவிடில் அவனும் பெருந்தீங்கு செய்வானென்றுமாம். அங்ஙனமாயின் அவ்விருவரும் பெருந்தீங்கு செய்யாமலிருக்கவேண்டும். அப்படிக்கின்றி அவர்கள் உலகில் பெருந் தீங்கு செய்யவுங் காண்கிறோமே. அன்றித் தீராத கொடூர நோயுள்ளவனுக்கு அந்நோய் கொடாவிடினும், நோயில்லாதவனுக்குச் சுக சரீரங் கொடாவிடினும் அவர்கள் பெருந்தீங்குகளையே செய்வார்களென்னில்,அங்ஙனமாயின் அவ்விருவரும் பெருந்தீங்குகள் செய்யாமலிருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள், நாம் இப்போது செய்யும் நன்மை தீமைகளுக் கிடாகப் பின்பு சுகமான மோக்ஷமும், துக்கமான நரகமும் கடவுள் கொடுப்பாரென்று சொல்லுகின்றார்கள். பின்பு உண்டாகும் மோக்ஷத்தின் சுகமும், நரகத்தின் துக்கமும் அதற்கு முன்னான இந்த ஜன்மத்தில் செய்த நமது வினைகாரணமாகக்கொடுப்பாரென்னில், இப்போது நாம் அனுபவிக்கும் சுகமும் துக்கமும் (இப்போது செய்யாமையால்) முன், ஜன்மத்தில் செய்த நமது வினைகாரணமாக வல்லவா கடவுள்

கொடுத்திருக்க வேண்டும்? கிறிஸ்தவர்களை ஒப்பா விடினும் நியாயமே அவர்களையொப்பச்செய்கின்றது. நாம் முன்பு இல்லாதிருந்து இப்போது சிருஷ்டிக்கப்பட்டோமென்று சொல்வதில் இன்னும் பெருந் தோஷமுண்டாகின்றது. ஜன்மத்தில் துக்கமே விசேஷப்பட்டிருக்கின்றமையால் நூதனமாய் ஆன்மாக்களைச் சிருஷ்டித்து விசேஷ துக்கத்திற் கிரையாக்குவது கடவுளிடத்தில் ஜீவகாருணிய மில்லையென்பதைக் காட்டுகின்றது. அன்றி அவரை வன்கண்ணரென்றுஞ் சொல்ல இடந் தருகின்றது.

முன்னே ஜன்மமுண்டாயின் பூர்வ வாசனை நமக்கிப்போதிருக்கின்றதா வென்னில், பிள்ளை பிறந்தவுடனே தாயின் முலைப்பாலை யுண்ணுகின்றது. முலையினிடத்துப் பால் இருக்கின்றதென்றும், அதைக் குடித்தால் பசி தீருமென்றும் அப்போது பிறந்த பிள்ளைக்கு எப்படித் தெரிந்தது? ஒரு வகுப்பில் படிக்கும் பல மாணாக்கர்க்குப் புத்தி ஒரே மாதிரியாக விருக்கவில்லை. ஒருவனுக்கு இலக்கணத்திலும், ஒருவனுக்குத் தருக்கத்திலும், ஒருவனுக்குக் கணிதத்திலும் பிரியமாயிருக்கின்றது. திரியோதனாதியர் இயற்கையில் துன்மார்க்கர்களும், தருமபுத்திராதியர் இயற்கையில் சன்மார்க்கர்களுமாம். இவைகளெல்லாம் பூர்வவாசனையென்று கூறுவிடில் வேறு வழியென்ன? பூர்வ ஜன்மமுண்டென வெந்தக் காரணத்தால் ஒத்துக்கொள்ளுகின்றோமோ, அதே காரணத்தைக் கொண்டு பின்னும்

ஜன்ம முண்டென்று ஸ்தாபிக்கலாம். எல்லாவுயிர்க ளிடத்தும் ஜீவகாருணியம் வைத்துப் பாசவைராக்கியத் தோடு இந்திரியங்களை ஜெயித்து, மனசை நிறுத்தி, நித்திய நிர்மல நிர்விகார நிர்ச்சல நிராதார நிராமய * அவாங்மனோகோசரமான சர்வேஸ்வரனைப் பத்தி யோக ஞானங்களால் சகளமாகவு நிஷ்களமாகவும் அவரவர் பக்குவத்துக் கியைந்தபடி தியானித்து, என்று நீங்காப் பேரின்பமுத்தியை ஒவ்வொருவரும் அடைய வேண்டுவது நிச்சயமாயின், அப்படிப்பட்ட அருமை யான மோக்ஷத்தை இவ்வொரு ஜன்மத்திலேயே அடையலாமென்பதெவ்வளவுங் கூடாது. ஒரு ஜன்மத் திலில்லாவிடினும் மற்றொரு ஜன்மத்திலாவது அடை யலா மென்றுரைப்பது நியாயமாயிருக்கின்றது. இதை விட்டுள்ளதொரே ஜன்மம்; முன்னுமில்லைப் பின்னு மில்லை; அந்த ஜன்மத்திலேயே கிறிஸ்துவை நம்பினால் தான் மோக்ஷமென் றுரைப்பது நியாயமாகாது. கிறி ஸ்துவென்னும்பெயரையே கேட்டறியாத நாட்டிலுள்ள ஜனங்களுங் கிறிஸ்துவை விசுவாசிக்காமையால் அக் கிறிஸ்து எந்த யுகாந்தகாலத்து மீளாத, அக்கினிமய மான நரகத்தில் தள்ளுவாரென் றுரைப்ப தெவ்வளவு விசாரணையில்லாமை! அக்கிறிஸ்தவர்களும் கிறிஸ்து வின்பேரில் குற்றங்கூறு திருத்தற்கு மற்றொரு ஜன்மம் உண்டென்று கூறுவது நியாயமாமே. இனியேனும் இக்கிறிஸ்தவர்கள் பைபில் குற்றமுள்ளதென்றும், மறு

* மனவாக்குக் கெட்டாத சர்வேஸ்வரனை யென்றபடி.

ஜன்ம முண்டென்றுங் கொண்டு, சுருதி யுத்தி யனுபவ முள்ள நமது இந்துமதத்தை மெய்யென்று கொள்வார்களாக.

## ௧௦-ம் இயல். ஏசுவின் அவதார பிரபல்லிய மறுதலை.

உலகத்துட்பாவமிகுதியாயபோதுநாம்பாவமார்க்கத்துட்பட் டெவ்வாற்றானுங் கெட்டுப் போகாவண்ணம் காக்குமாறு பரமேசுவரனது இச்சையால் வேண்டிய வடிவங் கொண்டுவருதற்கு அவதாரமென்று சொல்லப்படுகிறது. ஏசுக்கிறிஸ்து கடவுளி னவதாரமென்பதற்குப் பைபிலிற் போதிய வாதாரமின்று. * ஏரோதரசன் ஆஞ்ஞை வரம்பிகத்தல் காரணமாகச் சிலுவையில் அறையுண்டகாலத்து, என் பிதாவே யென்னைக் கைவிட்டீரா கைவிட்டீரா வென்றழுது வருந்தி மரித்த ஏசுக்கிறிஸ்துவைப் பாதிரிகள் வீணே அக்கடவுளின் மதலையெனக் கூறிப் பாமரரைமயங்கச் செய்கின்றனர். அது ஏசுக்கிறிஸ்து மனிதனே யென்னும் புத்தகத்திலு மினிது விளங்க வெழுதப்பட் டிருப்பதைக் காண்க.

* "அப்பாவோ வெனையிவண் கைவிட்டனையோ
வென்றன்றேயேசு நொந்து
செப்பாமன் புலம்பியது செப்புமவன்
றுயருறுகைசீவான் மாபோற்
குப்பாயவாழ்க்கையிற் றுன்புறு மிவனோ
கடவுள்கொண்ட வுருவிற்கேற்ப
விப்பாரினடித்தன னென்றிடிற் றுயர
முற்றிலனென்றிசைத்திபேதாய்."

(ஏசுமதநிகரகற்ப நிராகரணம்.)

ஞானோதயம், பரமகுருவாகிய ஏசுவின் வருகையை யூதர் அறிந்திருந்ததுமன்றி, பார்சியா, இந்து, எகிப்து, கிரேக்கு முதலிய தேசத்தாரும் அறிந்திருந்தார்கள் என்று கூறுகின்றது. அவர் அவதரித்திருந்த தேசத்தாருக்கே தெரியாதென்றுமுன்னமே செவ்வனே காட்டினோமாக; மற்றைய தேசத்தார்க ளெங்ஙனம் அறிந்தார்கள்? ஆதலின் ஆதாரமில்லாத கட்டுக்கதையென்று விட்டுத் தள்ளுக.

## ௧௧-ம் இயல். ஏசு சற்குருவென்பதன் மறுதலை.

நித்தியாநித்திய வஸ்து விவேகமாதி சாதனங்களையுடையராய்த் தம்மை வந்தடுத்த பரிபாகி (சற்சீடர்) களுக்குத் தத்துவோபதேசஞ் செய்தருளி, அஞ்ஞானத்தைப் போக்கி அவர்களை யோகஞான முதிர்ச்சியுடையாராகக் கருணைகடாக்ஷம் வைத்தருளி நிரதிசயானந்த வின்பந் துய்க்குமாறு அனுக்கிரகிக்க வல்லுநரே சற்குருவாவர்.

இத்தகைய சற்குருவின்பால் சரண்புகு மாணவரியல்புகளில் முதற்படியான நித்தியாநித்திய வஸ்து விவேக வுணர்ச்சியேனும் ஏசுவின்பால் அமைந்திருந்ததாக அப்பைபில் ஒரு சிறிதாயினும் யாண்டும் கூறிற்றிலது. அது உள்ளதை உள்ளபடி கூறிற்றென்பதே. இங்ஙனமாணவரியல்பே யமையப்பெறாதஅவர் சற்குரு

ஆவ தெங்ஙனம்? அவர் சீடர்களோ * பொய்ச்சான்று பகர்வோரும், ஆபத்து நேர்ந்துழி அடுத்தவரைப் பகைவர்க்குக் காட்டிக் கொடுப்போரும், குடியரும், இழிதொழி லியற்று மியல்பினருமாம். இவ் விருத்த நடை யுடையாரை மாணவராகக் கொண்டு மதுபானப் பிரியராய் வலைஞர்பாடிகளினுமலைகளினு முப்பதுவயசு காறும் கரந் துறைந்து இறுதியில் சிலுவையி லறை யுண்டு மனச் சமாதானமின்றி மரித்த ஏசுவைக் கிறிஸ் தவர்கள் தம் மனச்சான்றுக்கு மாறுகச் சற்குருவெ னக் கூறுதல் தகுதியுடைமை யாகாதென்க.

---

## ௧௨-ம் இயல். பைபிற் கடவுளின் நியாயத்தீர்ப்பு மறுதலை.

எந்தக்காலத்திலும், எந்தத்தேசத்திலும், எந்த ராஜாங்கத்திலும் அவனவன்செய்த குற்றத்திற்கு அவனவன் தக்க தண்டனையடைவது வழக்கமு நியாயமுமாகவிருக்கின்றது. அற்ப குற்றஞ் செய்தவனுக்கு அற்ப தண்ட

* "பன்னிருவரேவரினும்பக்குவநன்
குடையரெமக்கினியர்நாஞ்சொ
னன்னெறியையாண்டுஞ்சென்றுபதேசித்
திடவல்லநல்லோரென்றே
யுன்னிறைவன்றெரிந்தபினரொருவனறை
போனதூஉமொழிந்தோர்நாங்க
ளன்னவனையறியோமென்றுரைத்ததூஉ
மவன்வஞ்சமளக்குங்கோலாம்."

(ஏசுமதசங்கற்ப நிராகரணம்.)

னேயும் பெரிய குற்றஞ் செய்தவனுக்குப் பெரிய தண்டனேயும் விதிக்கின்றார்கள். குற்றவாளியைத்தண்டிப்பது பழிக்குப் பழி வாங்கவேண்டு மென்னுங் கருத்தல்ல; அவனை நல்வழிப்படுத்துதற்கேயாம். குற்றவாளியைத் தண்டிப்பதில் மூன்றுவித லாபமிருக்கின்றது. க-வது, செய்தகுற்றம் பரிகாரமாகின்றது. உ-வது, பின்னும் அப்படிப்பட்ட குற்றஞ் செய்யமாட்டான். ௩-வது, இதைப் பார்த்த மற்றவர்களு நமக்கு மிப்படிப்பட்ட தண்டனை வருமே யென்று குற்றஞ் செய்ய அஞ்சுவார்கள்.

நியாயாதிபதி அற்பகுற்றஞ் செய்தவனேயும் பெரிய குற்றஞ் செய்தவனேயுஞ் சமமாகத் தண்டிப்பானேல் அவனை நியாயாதிபதியென வெவருஞ்சொல்லார். அன்றி அற்ப குற்றஞ்செய்தவனே (பெரிய குற்றஞ் செய்தவனுக்கும் விதிக்கத்தகாத) அதிக பெரியதண்டனே விதித்தென்று நீங்காப் பெருந்துன்பத்தில் அழுத்துவானேல் அவனேக் கொடியனினு மிகக் கொடியனென்றே யுரைப்பார்கள். இவ்வாறு செய்வதனால் குற்றஞ் செய்தவனேக் குணப்படுத்தி நல்வழிப் படுத்துதற் கிடமில்லாமற் போகின்றது. மனுஷர்களில் குற்றஞ் செய்யாதவர்கள் யாருமில்லே. அற்ப குற்றத்திற்கு நித்திய தண்டனே யெனில் யாவருமே நித்திய தண்டனேக்குள்ளாவார்கள். இவ்வாறு தீர்ப்புச் செய்யு நியாயாதிபதி மூட சிரோமணி யென்றே யுரைக்கப்படுவன். இதனால் சிறு குற்றஞ் செய்தவனுக்குச் சிறு தண்டனேயும்

பெருங் குற்றஞ் செய்தவனுக்குப் பெருந் தண்டனையும் விதிப்பது நியாயமென்றும் இதற்கு மாறாக விதிப்பது அநியாய மென்றும் ஏற்பட்டன. சிறுகுற்றஞ் செய்த வனுக்குப் பெருந்தண்டனை விதிப்பதே அநியாயமாயின் குற்றமே செய்யாதவனுக்கென்று மீளுதலில்லா மகா கொடிய நித்திய தண்டனை விதிப்பது எப்படி நியாய மாகும்! இனிக் கிறிஸ்தவர்கூறுங் கடவுளுடைய நியா யத் தீர்ப்பைச் சிறிது ஆராய்வாம்:—

கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை நம்பி விசுவாசித்தால் தான் மோக்ஷமென்றும், நம்பி விசுவாசிக்காதவர் எவ் வளவு சற்கிருத்தியங்கள் செய்யினும் மோக்ஷம் அடை வதில்லை யென்றும், அவர்கள் அடைவது நித்திய நர கமே யென்றுங் கூறுகின்றார்கள். இது சரியென்று ஒத் துக்கொள்ளுங்கால் அயோக்கியர் மோக்ஷம் பெறவும் யோக்கியர் நரகம் அடையவுமாகுமன்றா? அதைப்பற் றிக் கடவுள் சந்நிதானத்தில் எ-என்பவனையும், பி-என்பவனையும் விசாரிப்பதாகவைத்துக் காட்டுவாம்:—

கடவுள்:—(எ-என்பவனைப்பார்த்து)நீ பூலோகத்தில் உன் வாழ்நாட்களில் செய்த செய்கைகளைச் சொல்லு.

எ:—ஐயா! நான் (ருo)ஐம்பது வயசுவரையில் சீவித் திருந்தேன்; நான்எவர்க்கும் தீங்குசெய்ததில்லை; பசித்த வர்க்கு அன்னமளித்தேன்; வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரங் கொடுத்தேன்; வியாதியஸ்தர்களுக்கு ஔஷ தம் வாங்கிக்கொடுத்து வியாதியைத் தீர்த்தேன்; ஏழை

களுக்குக் கல்வி கற்பித்தேன்; மனைவிமக்களைக் காப் பாற்றினேன்; ஒருவருடைய சொத்தையும் அபகரித்த தில்லை; மெய் பேசினேன்; அன்னிய ஸ்திரீகளைத் தாய் போற் கருதினேன்; தேசநன்மையின்பொருட் டுழைத் தேன்; என் மதத்தில் சொல்லிய பிரகாரம் தினந்தோ றுங் கடவுளை மறவாமற் பயபக்தியுடன் தொழுதேன்.

க :— எல்லாம் சரிதான். நீ கிறிஸ்துவே ரக்ஷக ரென்று நம்பி அவரை விசுவாசித்தாயா? நான் மண்ணி னால் ஆதாமையும், ஆதாவின் விலாவெலும்பினால் ஏவா ளையும் பண்ணினதை நம்பினாயா ?

எ:—கிறிஸ்துவை நான் அறியமாட்டேன். ஆதாமை மண்ணினாலும், ஏவாளை எலும்பினாலும் தேவரீர் பண் ணின சங்கதி எனக்குத் தெரியாது. என் தேசத்தில் நான் மாத்திரமல்ல, ஒருவருமே அறியமாட்டார்கள். இந்தப் பிரஸ்தாபமே அங்குக் கிடையாது.

க :—அதெல்லாம் எனக்குத் தெரியாது; நீ நம்பத் தான் வேண்டும். நம்பாமையால் நித்திய நரகத்திற்குப் போகவே வேண்டும்.

எ :—என்பேரில் யாதொரு தப்புமில்லாதிருக்கத் தண்டனை செய்வது, அதினு நித்திய தண்டனை செய் வது நியாயமா? வேண்டுமானால் நான் ஒரு பாரிஸ்டரை வைத்து எனது நியாயத்தை அவர் மூலமாகத் தெரியப் படுத்திக் கொள்ளுகின்றேன்.

க:—பாரிஸ்டரை வைத்துப் பேசுவது பூலோகத்தில். பூலோக நியாயத்திற்கும் எனது நியாயத்திற்கும் ஒவ்வாது. ஆதலால் நீ நித்திய நரகத்திற்குப் போவென்று கூறி, பி-என்னும் மற்றொருவனை அழைத்து அவ்வாறே கேட்டார்.

பி:—ஐயா! நான் ஒருபெரிய வர்த்தகசாலையி லுத்தியோகமா யிருந்தேன்; அவ்விடத்தில் லக்ஷக் கணக்கான பொருளைத் திருடினேன்; அனேகரிடத்தில் கடன் வாங்கிக் கொடுக்காமல் வாயிற் போட்டுக் கொண்டேன்; அனேக ஜீவர்களை இம்சித்துக் கொன்றேன்; கற்புள்ள ஸ்திரீகளைக் கெடுத்தேன்; சூதாடினேன்; கட்சாராயங் குடித்தேன்; மெய்வார்த்தை என் வாயில் வந்ததேயில்லை; பெண்ஜாதி பிள்ளைகளை நடுத்தெருவில் கஞ்சிக்கு அலையவிட்டு அந்நியமாதரோடு வாழ்ந்தேன்; இன்னும் பற்பல அக்கிரமங்க ளியற்றினேன்.

க:—அதெல்லாம் இருக்கட்டும்; ஏசுக்கிறிஸ்துவை விசுவாசித்தாயா? ஏசுக்கிறிஸ்துவை நம்பினால் இரக்ஷிப்படையலாமென்று நம்பினாயா? ஆதாமையும், ஏவாளையும நான் பண்ணினதை நம்பினாயா?

பி:—ஏசுக்கிறிஸ்துவை விசுவாசித்தேன்; ஏசுக்கிறிஸ்துவை நம்பினால் இரக்ஷிப்படையலாமென்று நம்பினேன்; ஆதாமையும் ஏவாளையு மண்ணினாலும் எலும்பினாலும் பண்ணினதையும் நம்பினேன்; அதோடு நியாயம் பாராமலே பைபிலையு நம்பினேன்; உலகைச்

சிருஷ்டித்து (ருஅகூஉ) ஐயாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டு வருஷங்களாயின வென்பதையும் அதிகமாய் நம்பினேன்; எல்லோருடைய பாவத்துக்கும் ஏசு பலியானு ரென்பதையும் வெகு பிரயாசைப் பட்டு நம்பினேன். மற்றப்பேர் நியாயமில்லாமையால் நம்பமாட்டோமென்று சொனனுர்கள். நான் உமது ஆக்கினை வரப்போகிறதென்று பயந்து நியாயத்தை நோக்காமலே நம்பினேன்.

க :—சந்தோஷம்! நீ நித்தியமோக்ஷத்திற்குப் போ.

அறிஞர்காள்! யனமொழி மெய்களா லெவ்வளவோ சற்கிருத்தியங்கள் செய்து தங்கள் மதத்தில் சொல்லிய படி கடவுளை உண்மையாக வழிபடினும் ஏசுவை விசுவாசிக்காவிடில் மோக்ஷமில்லையாம்; நித்திய நரகந்தானும். இது என்ன நீதி! கிறிஸ்துவை விசுவாசித்தால் மோக்ஷமுண்டாகு மென்று நியாயம் பாராமலே வைத்துக்கொண்டாலும், கிறிஸ்துமத மிப்படிப்பட்டதென் றறியாத நாட்டிற் பிறந்து கிறிஸ்துவை நம்பி விசுவாசிக்காவிடில் அது யார் தப்பு? கடவுள் தப்பா? அவன் தப்பா? இதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். நமது இந்துமதத்தில் பரமேஸ்வரன் அவ்வாறு செய்வதில்லை. சிறுகுற்றஞ் செய்தவனுக்குச் சிறுதண்டனையும் பெருங் குற்றஞ் செய்தவனுக்குப் பெருந் தண்டனையும் செய்கின்றார். நித்தியதண்டனை விதிப்பதில்லை. பாவஞ் செய்தவர்களுக்குப் பாவமொழிகிறவரையில் ஜன்மத்தைக்

கொடுத்துப் பின்பு முத்தியைத் தருகின்றார். முத்தி அடையாதவர் ஒருவருமில்லை. இது வேதாகம சாஸ்திரங்களின் றுணிபாம்.

---

## கஅ-ம் இயல். ஏசுவின் மார்க்கத்தை அகஸ்தியர் கேள்விப்பட்டிருந்தா ரென்பதன் மறுதலை.

ஏசுவின் மார்க்கத்தை அகஸ்தியமுனிவர் அறிந்திருந்தா ரென்னு மிக்கதை "தந்தை கல்யாணப் பந்தலில் மைந்தன் தாம்பூலோபசாரம் பண்ணினான்" என்றாற்போலிருக்கிறது. இற்றைக்கு (கஅகூ0) ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூறு வருஷங்களுக்கு முன்னே பிறந்தவரெனக் கொண்டாடப்படும் கற்பனா மூர்த்தியாகிய ஏசு அவதரித்தமையையும் அவருடைய வுபதேசங்களையும் இந்துக்களுடைய கணிதப்படி (கஉ,உ00) பன்னீராயிரத் திருநூறு வருஷங்களுக்கும், துரபிமானத்தாற் சுருங்கிய மனசுடையராகிய பாதிரிப் பண்டிதர்கள் கணிதப்படி (௩000) மூவாயிரம் வருஷங்களுக்கும், இன்னுஞ் சில ஐரோப்பிய பண்டிதர் கணிதப்படி ஐயாயிரம் (ரு000) ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னர் இருந்த அகஸ்தியமுனிவர் அறிந்ததுங் கேட்டதுமெப்படியோ! பட்டப்பகலை யிரவென்று சொல்லும் பாதிரிகள் தங்கள் வாயால் தாங்களே கெட்டுப்போகின்றார்கள். அது நிற்க, அகஸ்தியமுனிவர் தமிழிலே செய்த நூல்களுள் ஒன்றாயினும் இந்நாளிலே கிடைப்பதரிது. எல்லாமழிந்தொழிந்து போயின. அகஸ்தியமுனிவர் செய்தஅகஸ்

தியம் என்னும் நூலிலேயுள்ள சில சூத்திரங்கள் மாத்திரம் பிறர் நூல்களிலே மேற்கோளாக எடுத்தாளப் பட்டுள்ளன. அவையன்றி முழு நூலுருபமாக ஒன்றேனும் தமிழுலகங் கண்டதும், இருப்பதாகக் கேட்டதுமில்லை. அங்ஙனமாகவும், அகஸ்தியமுனிவர் ஞானமென்னு நூல்வந்தது மாயமேயாம். மாயாசிருஷ்டியாக அநேக நூல்கள் பின்னர் நாளிலும், இந்நாளிலும் பெரியோர் பெயரை ஏந்தி வெளிப்பட்டன. இத்தமிழ் நாட்டின் மாத்திர மன்று; ஆங்கிலேய நாட்டிலும் பல நூல்கள் பூர்வவித்துவான்கள் பெயரைத் தூக்கிவெளிப் பட்டன. அவ்வாறு புரட்டினோரும் அகப்பட்டொப்பினார்கள். அவ்வாறே அகஸ்தியமுனிவர் ஞான முதலிய பல வைத்திய நூல்களும் அகஸ்தியமுனிவர் பெயரை ஒட்டிப் பிற்காலத்துப் புன் கவிஞராலும் குச்சிலிஅச்சியந்திரகாரராலும் வெளிப்படுத்தப் பட்டன. உள்ளபடி அகஸ்தியமுனிவர் வாக்கன்று.(ரெவரென்டு-டேயிலர்) (Rev. Taylor) பாதிரியாரும் தாம் செய்த (Oriental Manuscript)என்னும்நூலில்இவ்வாறேகூறியிருப்பது காண்க. அகஸ்தியமுனிவர் வாக்கல்ல வென்பதற்கு இங்கெடுத்துக் கூறப்படும் பாடல் ஒன்றே போதிய ஆதாரமாகும். அகஸ்தியமுனிவர் ஞானம் ௨௫-வது பாடல் வருமாறு:—

"உரைத்திட்டே னென்றுசொல்லிச் சித்தரெல்லா மொட்டார மாகவென்னைக் கோவிப்பார்கள், மறைத்திட்ட பெரியோரு முலகத்தோரு மயங்குவா ரென்

ணையுமே வகையாய்ச் சொல்வார், குறைத்திட்டே யுரைத்தவித்த நூலைத்தானே கூசாமல் சொல்விட்டேன் கிழிக்கப் பார்ப்பார், அறைந்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்தவர்களுக்குங் காண்பிப்பா யறியத் தானே”

தமிழ்ப்பாஷைக்கு ஆதி இலக்கண கர்த்தராயும் * பிற்றோன்றிய விலக்கணாசிரியர்கள் பொன்போற் போற்ற விளங்குபவராயும், † சத்தரிஷிகளு ளொருவராயும் விளங்கிய அகத்திய முனிவர்பெருமான் ‘ஒட்டார’ முதலிய ‡ கிராமியச் சொற்களைப் புணர்த்தியும், “பெரியோரு முகைத்தோரு மயங்குவார்” என்று கூறிப் பெரியோர்க்கு மயக்கமேற்றியும், சொன்னோக்கும் பொருணோக்குஞ் சிறிதேனும் அமையப் பெறுவாயும், குணவலங்காரங்கள் குறிக்கொள்ளா வகையாயும், குறிப்புப்பொருண் முதலிய வொரு சிறிதும்

---

*** தொல் காப்பியர்முதல் பன்னிருவர்.**

தொல்காப்பியர், செம்பூட்சேஎய், வையாபிகர், அதங்கோட்டாசான், அவிநயர், காக்கைபாடினியார், துராலிங்கர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பர், நற்றத்தர், வாமனர்.

**† சத்தரிஷிகள்.**

அத்திரி, ஆங்கிரசர், கௌதமர், சமதக்கினி, பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர். இம்முறை யன்றியும் அகத்தியர், ஆங்கிரசர், கௌதமர், காசிபர், புலத்தியர், மார்க்கண்டேயர், வசிட்டர் என்றுங் கூறுப.

‡ இழிஜனர்கூற்று,

விரவப்பெறுவாயும்,பித்துரைமிக்குப்பெருகிடுமாறும், வெற்றெனத் தொடுத்தல் விளங்கிடுமாறும், 'உரைத் திட்டேன்' என்றற் றொடக்கத்துச் செய்யுள்களைச் செய் தருளினரென்ப தொவ்வுத லுடையதாகுமா? அறிஞர் காள் இதைக் கவனியுங்கள்! "வைரவூசியுமயன் வினை யிரும்பும், செயிரறுபொன்னைச் செம்மை செய்யாணி யும், தமக்கமை கருவியுந் தாமாமவைபோல், உரைத் திற முணர்த்தலு முரையது தொழிலே." என்றற் றொடக்கத்து அகத்தியச் சூத்திரங்களைக் கேட்கப்பெற் றோரு மிருப்பார்களாயின் 'உரைத்திட்டேன்' என்றற் றொடக்கத்துப் பாடல்களை அகத்தியமுனிவர் பாடல்கள் எனக் கூறிப் பரிபவப்படார் கிறிஸ்தவரென்க.

'உரைத்திட்டேன்' என்றற் றொடக்கத்துப் பாடல் கள் அகஸ்தியமுனிவர் ஞானம் என்று பெயர் சூட்டிப் பாடிய கவிப்புரட்டனது வஞ்சகக் கருத்தைச் செவ் வனே காட்டிவிட்டது. அகஸ்தியமுனிவரோ ஒருவர் தாக்ஷண்யமும் வேண்டாத மகாரிஷி. அவர் இந்நூலைச் செய்திருப்பாராயின், தமது கொள்கையையும் சித்தாந் தத்தையுங் கூசாதே யுரைத்திருப்பார். அவர் வாக்கு க்கு எதிர்வாக் குரைக்குஞ் சிட்டருமுளராவரோ? அவர் வாக்கை உலகந் தெய்வவாக்காகக் கொள்வதன்றோ? உலகத்துக்கு அவர் சொல்லு முபதேசமெல்லாம் நல் லுபதேசமா மன்றோ? அங்ஙனமாகவும், சித்தர் கோவி ப்பார்கள், பெரியோர் வசையாய்ச் சொல்வார், இழிக் கப்பார்ப்பார் என்றின்னன சிந்திப்பது அனாவசியக

மன்றோ? இதனால் கவிப்புரட்டன் செய்கையேயாமென்பது நிச்சயமாகின்றதன்றோ? என்னை! அகஸ்தியமுனிவருடைய மெய்ந்நூல்களையும் அவருடைய அறநெறிகளையும்பிறருக்கு அவர்செய்த ஞானோபதேசங்களையும் அவர் சமஸ்கிருதத்திலே செய்திருக்கும் கிரந்தங்களையும் கற்றுக் கேட்டறிந்த விவேகிகள் இப்பித்த வாக்கியங்களையும் போலி யுபதேசங்களையுங் கண்டால் அவை அகஸ்தியமுனிவர் வாக்கல்லவென்று இகழப் போகின்றார்களே யென்னும் அச்சங் காரணமாக, அவ்வகஸ்தியமுனிவர் தாமே கூறியதாகக் கூறிவிட்டான் புரட்டனென்க. இந்த விஷயத்தை விரிப்பிற்பெருகும். திருவள்ளுவநாயனார் அருளிச்செய்ததாகச் சொல்லப்படும் ஞானவெட்டியான் செய்தியும் இதுவேயன்றோ?

கிறிஸ்த வருஷம் (௧௭00) ஆயிரத் தெழுநூறும் ஆண்டளவிலும் அதற்கு மேலும் இந்தியாவிலே பரவத்தொடங்கின கத்தோலிக்கக் கிறிஸ்தவருட் சிலர் தமிழ் வைத்திய நூல்களைக் கொண்டு சீவனந்தேடப் புகுந்தார்கள். அந்நூல்கள் சைவ வைஷ்ணவர்களாற் பாடப்பட்டனவாக, காப்புமுதலிய பாடல்களு மந்திரங்களும் இக்கிறிஸ்தவர்களுக் கொவ்வாவாயின. அதுபற்றித் தமது கருத்துக் கியைய அச்செய்யுள்களைக் குறைத்துங் கூட்டியும் பேதித்தும் அமைத்துக் கொண்டார்கள். பரம்பரைக் கிறிஸ்தவ வைத்தியர்களிடத்துள்ள வைத்திய நூல்கள் சில இவ்வாறிருத்தல் இந்நாள்காறும் பிரத்தியட்சம் ஆகவே, இந்த அகஸ்திய ஞானமும் அவ்வாறே அமைக்கப்பட்ட நூலாதல் வேண்டுமென்க.

## ௧௪-வது இயல். முடிவுரை.

இதுகாறுங் கூறியவாற்றால் கிறிஸ்தவர்களுக்கு நித்தியாநித்திய விவேக மின்றென்றும், படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக என்பது எவ்வாற்றானு மொவ்வாப் பெரு மசங்கதமாமென்றும், கடவுள் தமது மகிமையைவெளிப்படுத்தும் பொருட்டுச்சேதனா சேதனவுலகைப் படைத்தா ரென்பது பொருந்துதலில தென்றும், பைபிற் கடவுட்குத் தெய்வவிலக்கண மின்றென்றும், பைபிளி னுலகசிருஷ்டி யுக்திக் கொவ்வாததென்றும், தெய்வசித்த நிலையைப் பைபி ளுணரப்பெற்றிலதென்றும், பைபிளின் தீர்க்கதரிசிகள் சொல்லிய தீர்க்கதரிசனங்கள் தீர்மானமுடைய வன்றென்றும், பாவமன்னிப்பிற்காக ஏசு மரித்தாரென்பது இயலாதென்றும், புனர்ஜன்மமின்றென்பது பொருந்தாதென்றும், ஏசுவினவதார மேற்கத்தக்க தன்றென்றும், சற்குருவியல்பு ஏசுவின்பால் சற்று மினைந்திலதென்றும், பைபிற்கடவுளின் நியாயத்தீர்ப்புப் பழுதுடைத்தென்றும், அகஸ்திய முனிவர் செய்தருளினரென்று சில வவலட்சணப் பாடல்களைக் கிறிஸ்தவர்கள் வெளியிட்டது மனச்சான்றுக் கொவ்வாப் பெருந்தவறுமென்று மின்னோரன்ன விஷயங்களை யுக்தி யனுபவ வசனங்கட் கியைய வச்சிரஸ்தம்பமாக இந்நூலின்கண் நிலைநிறுத்தினு மென்க.

பாதிரிகள் யாம் யாதுகூறினு மெழுதினு மவற்றைக் கவனியாதவர்களாய், தங்கள் கருத்து நிறைவேறும் வண்ணம் நம்மவர்கள் முன் யுக்தியனுபவ வசன மொரு

சிறிதும் ஏற்கப் பெருத அப் பைபிலைப்பற்றி மிகு பெருமையாகச் சொல்லி நம்மவர் (கல்வியறி வில்லாதவர்)களைக் கிறிஸ்தவ ராக்கவே பிரயத்தனப் படுகின்றார்கள். இதுநிற்க, கிறிஸ்தவப் பிரசங்கிகள் தங்கள் தெரியாமை காரணத்தாலோ, திரவியாபேக்ஷையாலோ நம்மையெல்லாங் கிறிஸ்துமதக் குழியில்தள்ளப் படாப்பாடுபடுகின்றார்கள். இந்துமதஸ்தர்களாகிய நாம், அவர்கள் வஞ்சகமாய்ச் சொல்லும் அவர்களுடைய துர்ப்போதனைகட்கிணங்கி அம்மதாபாசத்தில் வீழாமல் தப்பிக்கொள்ளவேண்டும். பிறரும் அற்ப போகத்துக்காக மயங்கிஅதில் வீழாதிருக்க அம்மதத் தவறுகளையும் நமது வேதாகம சாஸ்திரங்களின் இரகசியங்களையும் பிரசங்கம் பத்திரிகை புத்தகம் இவற்றின் வழியாகத் தெரிவித்தல்வேண்டும். கிறிஸ்துபோதகர்களெந்தெந்த விதமான தந்திரங்களைச்செய்து எந்தெந்த விதமாகவோ நம்மையு நமது சகோதரர்களையும் பிடிக்க மாய வலை வீசுகின்றார்கள்; நாமும் நமது சகோதரர்களும் அவர்கள் வீசும் அம்மாய வலையில் சிக்காதிருக்க நமது வேதாகமங்களுரைத்தவழியே பரப்பிரமத்தைப் பிரம விஷ்ணு மகேச்வர ஸ்வரூபமாக அநுதினமு முள்ளும் புறம்பும் தியானிப்போமாக.

கிறிஸ்தவ துன்மதாபாசவிளக்க

முற்றிற்று.

உ

ஓம்.

# ஏசுவை நம்பினால்
# இரட்சிப்படையலாமா?

## ௧-வது இயல். ஏசு என்பவரின் வரலாறு.

உலகில் ஐந்து கண்டங்களி லொன்றான ஐரோப்பாவின் பூர்வ சரித்திரத்தைத் திட்பநுட்பமாகக் கால க்ரமவரையறைகளோடு எழுதிவைத்தவர் யோசிபாஸ். ஏசு என்பவ ருள்ளவாறு அக்காலத்து(௧௯00-வருஷங்களுக்குமுன்) இருந்தவரும், அற்புதங்களால் வெகுஜனங்களைப் பிரமிக்கச் செய்தவரும், இறந்தவர்களுக் குயிர் கொடுத் திரக்ஷித்தவருமேயாயின், அவர் யோசிபாஸ் எழுதிய சரித்திரத்தில் கூறப்படாது போவாரா! இது தான் ஒருபோது அவர் செவிக்கு எட்டியிராது போயினும், ஏசு கொலையுண்டபோது பகற்காலம்இராக்காலம் போல அந்தகாரமா யிருந்ததென் றுரைப்ப துண்மையாயின் அச்சம்பவமும் யோசிபாஸுக்குத் தெரியாதுபோகுமா? அதுவும் எட்டாது போயிருக்கினும்,அன்றுநிகழ்ந்ததாகச் சொல்லப்பட்ட பூமியதிர்ச்சியுமா யோசிபாஸுடைய மனத்தைவிட்டு நீங்கியது! இன்னும் பைபிலிலே இன்ன வருஷம் இன்ன மாசம் இன்ன தேதி யென ஏசு பிறந்தநாட் கூறப்படாதுபோன தென்னை? பிறந்தநாளி

னும் இறந்தநாள் அவசியகங் கணிக்கப்படவேண்டுவ தொருநாளாயிற்றே? அதுதானும் இன்ன நாளென் றெழுதப்பட வில்லையே. புதிதாக ஒரு நக்ஷத்திரம் தோன்றியகாலத்தைக் கொண்டு ஜனனநாளைக் கணிக்க லாமேயென்ருலோ, கஅகூ௦-வருஷங்களுக்குமுன் நவீன மாக நக்ஷத்திரமொன்று தோன்றியதாக இந்திய சீன பாரசீக ஐரோப்பியவானசாஸ்திரிகளில் யாராவதொப்பு கின்றார்களா? இல்லையே. ஆதலின் ஏசு கற்பனுமூர்த் தியே யென நிச்சயிக்கப்படுகின்றார். நிற்க, உள்ளவாறு ஜீவித்தவரேயாகுக.

---

## உ-வது இயல். ஏசு தெய்வ * அமிசமுடையரா?

இறைவனின்முற்றறிவுடைமைமுதலியமங்கலகுணங் களின் றன்மை யமையப்பெற்றோர் தெய்வ அமிச முடையோ ரெனப்படுவார். தெய்வஅமிசமாகப் பிறந்த வர்களென்று உலகில் பலஜாதி யுள்ளும் பலவாயுள்ள மதங்களால் கூறப்படுபவர்கள் பிறந்தவாருயினும் ஏசு பிறந்தனரா? † யோனிவாய்ப் படாது பிறந்தனரா? கருப்பையில் பத்துமாசங் கிடந்து நெருக்குண்ணுது

---

* அமிசமெனினுங் கூறெனினு மொக்கும்.

† "நால்வகையோனியுளொன்றிற்பட்டுநடக்குந
மால்கெழுமான்மவருக்கமென்றேவைத்தனர்
சூல்கொள்சராயுவுள்வீழ்ந்துயேசுதோன்றலிற்
பால்வழியிற்றுழ்பசுவேயாவன்பதியாமோ".

(ஏசுமதசங்கற்ப நிராகரணம்.)

பிறவிடத்தில்ஜனித்தனரா? ‡ பிறந்தபோது உலகறிந்த அற்புதங்கள் நிகழ்ந்ததுண்டா? மனுஷரதுருவத்துக்கு மாறாக நான்கு கை எட்டுத் தலையோடு பிறந்தனரா? பிறந்தவுடன் எழுந்து நடந் துபதேசிக்கத் தொடங்கினரா? பசி தாக நித்திரை மல ஜலோபாதிக ளின்றி வளர்ந்தனரா? ஒருவகையினுஞ் சிறந்திடாத சாமானிய நரரைப்போல் கருவாகியுருவாகி நெருக்குண்டு நாற்றச் செந்நீர்ப் பையிற் கட்டுண்டு காலத்தாற்றள்ளுண்டு வெளிவந்த நரமனிதனைக் கடவுண்மதலையென்று கட்

‡ "தேவசுதனென்றேதிரிந்தரச
னெறியையிவன்சிதைக்குமீது
பாவமெனவவண்யூதர்பற்றுகின்ற
வமையத்தும்பாராள்வென்றிக்
காவலன்முற்கொணர்போழ்துமவன்மரத்தி
லறைபோழ்துமிறைமைகாணூஉ
வேவருந்தற்றெளிந்துயச்செயாமையினற்
புதச்செயல்கள்யாவும்பொய்யே.

யாதனையுற்றெம்பொருட்டாலரசினிறந்
திடவெண்ணியொழிந்தானுண்டு
காதலருள்வலிகாட்டுமுறையையெனி
னக்கருத்தைநயமாவேந்தற்
கோதியவன்றுணியுமாறற்புதங்கள்
சிலகாட்டியுயிரைப்போக்க
ணீதியொளித்தோடினதும்பிறவுமவன்
பட்டிமையேநிறுத்துமன்றே."

(ஏசுமதசங்கற்ப நிராகரணம்)

டுரைப்ப தெங்ஙனம்? அவர் பிறந்த முகூர்த்த விசேஷ மாக முதலாவது தாயார்க்குப் பதிவிரதா தோஷமுண் டாவதாயிற்று. இரண்டாவது அந்நாட்டில் அந்நாளில் இரண்டு வயசுக்குட்பட்ட மூவாயிரம்பிள்ளைகள் கொலை யுண் டொழிந்தன. மூன்றாவது அந்நாடு முழுவதும் துக்கசமுத்திரத்தில் மூழ்குவதாயிற்று. கடவுட் குழ ந்தை பிறந்திருந்தால் தானே களிகூரவேண்டிய நாடு இப்படித் துக்கங்கொண் டாடுமோ? முகத்திலில்லா அழகு புட்டத்திலுண்டாமோ என்றபடி, பிறந்தபோது இல்லாத இரக்ஷிப்பா ஏசு இறந்தபோ துலகத்துக்குக் கிடைத்துவிட்டது! இன்னும், ஊர்க்குத் துக்கத்தை விளைவித்த அக்கடவுண் மதலை, தானாவது சுகம் பெற் றிருந்ததா! அந்தோ! பிறந்தவீட்டில் கிடந்து வளரும் பாக்கியமு மில்லாமல் ஊர்ஊராய்த் தந்தை தாயரோ டலைந்து துன்புறுவதாயிற்றன்றோ! ஆதலின் எப்படிப் பார்க்கினும் ஏசு மனுஷாமிசமே யுடையராவரென்க.

---

ஙூ-வது இயல். ஏசு அறிவினுஞ் சிறந்தவரா?

மனசை அது சென்றவிடத்துச் செல்லவிடாது விஷ யங்களின் நன்மை தீமைகளை யாராய்ந்துணர்ந்து, தீயதி னின்றும் விலக்கி நல்லதன்பாற் செல்ல விடுதலே அறி விற் கிலக்கணமாம். இத்தகையவிலக்கணம் ஏசுவின்பால் அமைந்துளதோவெனச் சிறிதாராய்வாம். ஏசு பிறந்து முப்பது வயசுவரையும் தச்சுத்தொழிலை மேற்கொண்டு ஜீவனம்புரிந்தார். எஞ்சிய மூன்றுவருஷகாலமே அவர்

பிரசங்கம் புரிந்தகாலம். அம்மூன்று வருஷ காலமும் பிரசங்கம் புரிந்தும் தம்மை யாவரும் மதிக்குமாறு நடந்துகொள்ள வியலாதவராயின ரென்பதைப் பைபில் தானேஒப்புகின்றது. கல்வியுநல்லொழுக்கமுமுடையார் எங்கேபோயினு மதிக்கப்படுவதுஇன்றுமாத்திரமுள்ள வியல்பன்று, பண்டு தொட்ட இயல்பேயாம். அங்ஙன மாகவும், இவர் புல்லறிவாளருள்ளு மிகச்சிலராகிய இழிகுலத்தவராலேயே மதிக்கப்பட்டார். அவருள்ளும் யூதா என்பவன் வயிறோம்பற்பொருட்டுஅவர்பின்றிரிந் தவனாகிய ஒருதுரோகி. அறிவிற்சிறந்தவராயின் இவனை ஆதியிற்றானே கண்டுணர்ந்து நீக்கிக் கொள்ளாரா? இன்னும், செல்வரைச் சுட்டிப் பேசியபோது செல்வ ரெல்லாம் பாழ்படுகவென்று திட்டினர். நியாயம் ஏசுவுக்கு எட்டிப்பழம்போலும். நியாய சாஸ்திரம் தமது விசுவாச சாஸ்திரத்துக்கு விரோதமா யிருப்பதுகொண்டு, நியாய சாஸ்திரிகள் பாழ்படுகவென்று திட்டியருளினர். சத்துருக்களைச் சிநேகித்தல் கடன் என்றார். தாயை மரபறியாமல் ஸ்திரீயேயென்றழைத்தார். மனுஷரை இன்சொலா லழைக்க வறியாது பாபிகளே வேஷக்காரரே யென்றும் பிறவுமாகக் கடின மொழிகளால் அழைத்தார். ஒருமுறை தந்தைதாயரைக் கனம் பண்ணு என்றார்; மற்றொருமுறை அவர்களைப் பகைத்துக்கொள்ளென்றார். அறிவில்லாததும் யாதொரு தீமையுஞ் செய்யாததுமாகிய அத்திமரத்தைச் சபித்தார். பன்றிகளைப் பசாசினால் துன்பமடையச் செய்தார். இப்

படி யெத்தனையோ வகையில் தமது வெள்ளறிவை வெளிப்படுத்திய ஏசுவை அறிவாற் சிறந்தவரென்பது எப்படி? ஏசு யோவானிடத்தில் மற்சனம் (ஞானஸ்நாநம்) பெறப்போனபோது, யோவான் யான் உம்மிடம் பெறவேண்டியவனாகவும் எவ்வாறு என்னை மற்சனம் பண்ணச் சொல்லுகின்றீர் என்று தடுத்துரைக்க, உலகியல் தவறாதிருக்குமாறு யான் உம்மிடம் பெறுகின்றேனென்று சமாதானஞ் சொல்லிப் பெற்றார். அப்பால் † உலகியலுக்கு விரோதமாக ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்தல் முதலிய அநேக செய்திகளைக் கைக்கொண்டார். வாயினுளுட்கொள்ளப்படுகின்ற பொருள் ஒருவனைக் கெடுக்கமாட்டாதென் றுபதேசித்த ஏசு மதுபானத்தைக் குறித்து என்ன சொல்லுவர்? (மத்தேயு-15:11.) மதுபானம் ஏசுவுக் குடன்படாயிருந்தமையாற்றான், இவ்வுபதேசத்தையு மருளிச்செய்து * பீப்பாக் கணக்காகச் சாராயத்தையு முற்பத்தி பண்ணி யருளினர்! இம் மதுபான மூர்த்தியையா பரம குருவென்று போற்றுவது! ஜனங்களை நரகக் குழியிற் றள்ளவந்த இவரை இரக்ஷக

† (யோவான் 5: 17.) ஏசு அவர்களை நோக்கி என்பிதா இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன் என்றார்.

(யோவான் 5 : 18.) அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினது மல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப்பிதா என்று சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே யூதர்கள் அவரைக் கொலை செய்யும்படி அதிகமாய் வகை தேடினார்கள்.

* இச்சாராய வுற்பத்தியே ஏசு முதன்முதல் செய்த அற்புதம். அதுவும் தமது மகிமை விளங்கும்படி செய்யப்பட்டதாம்.

றென்று கூறுவது எத்துணை மதிகேடு! நேர்ந்த நேர்ந்தகாறு பேசுகின்ற ஏசுவா அறிவிற் சிறந்தவர்!

## ௪-வது இயல். ஏசு பராக்கிரமசாலியா?

பராக்கிரம மென்பது பிறரைக் கீழ்ப்படுத்தி யாளுந் தன்மையாம். இத்தகையசெயல் ஏசுவின்பால் உளதோவெனின் அஃது ஒரு சிறிதுமின்றாம். தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டு முண்டென்றபடி, தொட்டிலிலாடிக்கொண்டிருந்த பருவமுதல் ஏசு ஒளித்தோடும் தொழிலைக் கைவிட்டா ரல்லர். பாலியத்தில் ஊர்தோறும் ஏரோதுராஜனுக்குஅஞ்சியோடியொளித்தார் மத்தியில் ¶ பசாசின் கைப்பட்டு அதனை எதிர்க்கமுடியாது காடுமலைகளெல்லாம் அலைத் துலைக்கப்பட்டார். கடைநாளில் யூதருக்கஞ்சி ஓடித்திரிந்தார். பின்னர் அவ்வேரோதரசன் ஆஞ்ஞைவழி பிடிக்கப்பட்டுச் சிலுவையில் அறையுண்டு ஆதரிப்பா ரின்றி யவமதிக்கப்பட் டிறந்த ஆற்றலிலராய ஏசுவைப் பராக்கிரமசாலியெனக் கிறிஸ்தவர்கள் நம்பி யொழுகுதல் எருமை வாலைப்பற்றி ஏரியி லிறங்கினவன் கதியாமென்க.

---

## ௫-வது இயல். ஏசு சித்தியாயினு முடையரா?

|| சித்தியென்பது ஒருவன் தான் கருதியவாறுசெயற்கரிய செய்து முடித்தற் கேதுவாயபேறும். அது பெரி

---

¶ "அலகைசெய்மயக்கினுளகப்பட்டன்றுயர்
மலையினுங்கானினும்வைகறுப்பது
தொலைவுறுங்காறுமூணின்றித்துன்புறூஉம்
கலதிமானுடன்சடிகடிந்ததெங்ஙனம்."
[ஏசுமதசங்கற்ப நிராகரணம்.]

|| சித்தி:—அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என எண்வகைத்தாம்.

தினை யணுவாக் காட்டல், அணுவினைப் பெரிதாக்காட்டல், விண்ணிடையேகல், மண்ணிடைப்புகல், தீயிடை நிற்றல், பரகாயப் பிரவேசம், இருந்துழி இருந்தெலாம் வரச்செயல் முதலியவாம். இனி ஏசு இச்சித்திகளு ளொன்றாயினுமுடையரா வென்பதைச் சற்றாய்வாம். எருசலேம் நகரை மூன்றுநாளில்அழித்து மூன்று நாளில் சமைப்பேனென்றார். யூதருக்கு ராஜா தாம் என்றார். கடுகத்தனை விசுவாசமாயினு முடையராயின் மலையைநோக்கி மலையே நீ நடந்துவா வெனினும் வருமென்றார். அது சொன்மாத்திரையே யன்றிச் செயன்மாத்திரை யொருசிறிது மின்றென்பதுபோதர, என் பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீர்என முக்காலு மாற்றி ஆற்றா துயிர்விட்டனரன்றா? உலகில் சமாதானத்தை யுண்டாக்க வந்தேனென்றனர். (அவரா லுண்டான கலகங்களுக்கும் யுத்தங்களுக்குங் கணக்குண்டா?) ஆதலின் சித்தி சிறிது மில்லாதவரென்பது பிரத்தியக்ஷமா மென்க.

---

## ௯-வது இயல். ஏசு இரக்ஷகராகத்தான் வந்தாரா?

இரக்ஷகமென்பது எவ்வாற்றானும் பிற வுயிர்களைத் துன்பத்தினின்றுநீக்கிக் காத்தலாம். குஷ்டரோகத்தை நிவர்த்திபண்ணும் வகை யறிவே னென்று கூறித் திரிகின்றவன் தானே குஷ்டரோகியாயிருந்தால் அவன் வார்த்தையை யாவர் விசுவசிப்பார்? ஏசு உலகத்துக்கு ரக்ஷகராகவந்த துண்மையானால், அவரைநோக்கி இச்

சிலுவையி னின்று மீண்டு வருவாயாயின் இப்போதே விசுவசிக்கிறோ மென்ற பலகோடி யூதர்களை அவர்கள் கேள்விக் கிசைந்து ரக்ஷிக்கலாமே. தன்னை இரக்ஷிக்க வகையறியாத இவனா நம்மை இரக்ஷிக்க வல்லவனென்று அவ்வூர் ஜனங்கள் பரிகசித்தபோ தன்றோ ஏசு என் பிதாவே ஏன் என்னைக் கைவிட்டீரென்று கதறிக் கதறியழுதார்! கண் முன்னின்று கேட்ட ஜனங்களை இரக்ஷிக்கச் சக்தியில்லாத ஏசுவா கண்ணாற் காணாத ஜனங்களை இனி இரக்ஷிக்கப்போகின்றார்! உண்மையில் மனமிரங்கி ஜனங்களை இரக்ஷிக்கவேண்டுமென்று வந்தவரேயாயின், நம்பிக்கை யில்லாத † அவ்வரசனுக்கும் அச்சனங்களுக்கு நம்பிக்கை வரத்தக்க காரியங்களைச்

† மதப்பிரவர்த்தனர்களாகிய மதாசாரியர்கள் தமது சித்தாந்தத்தை நிலைநிறுத்திப் பரவச்செய்யவேண்டுமேல், முன்னர் மன்னவைக்கண்ணே பிரபல நியாயமூலியமாகத் தமது சித்தாந்தத்தைநிலைநாட்டிஅம்மன்னனுமொப்புமாறுசெய்யின், "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்ற பழமொழிப்படி, அம்மன்னனே யன்றி அப்பிரசைகளு மொப்பி யொழுகுவார்க ளென்ப தொருதலையாமென்பது போதர,

"அந்நாளிற்சிறந்தவரென் றறையூதர்
பிரதானவாசானீதி
மன்னனாவேரோதின்வழியினுளார்க்
கேசுவுரைமகிழ்ச்சியாக்கா
தின்னாமைவிளைத்தமைகேட்டனமெவர்க்கு
மினியவாமுறுதிநாடிச்
சொன்னாமென்பதும்பல்லோர்கொண்டனரென்
பதும்பொய்யேசூழுங்காலே.

செய்தாயினு நம்பச் செய்வோம் என்று அவர்கள் கேட்டபடி செய்கிறாரா! புருஷனைக் கூடாது ஒருத்தி பிள்ளைப் பெற்றாளென்றால் யாவர்தா நம்புவர்! நம்பாத வரைத் தண்டிப்பேனென்று மிருகந்தானும் கூறுமா? கண்ணாற் கண்ட ஜனங்களே நம்பாதபோது கண்ணாற் காணாத ஜனங்களுக்கு எவ்வாறு நம்பிக்கை யுண்டாகும்? ஏசு நமக்கு இரக்ஷகர் என்று நம்பியிருந்த சிஷரெல்லோரும் ஏசுவை யூதர் பிடித்தபோ தென்செய்தார்கள்! நம்பினார்களா? தம்முயிருக்குத்தாமே ரக்ஷகரென் றெல்லோரும் ஓடிப்போய்விட்டார்க ளன்றோ! ஓடிப்போனமையாற்றான் தம்மை இரக்ஷித்துக்கொண்

---

மன்னவனெங்ஙனமொழுகுமன்னுயிரு
மங்ஙனமேயொழுகிவாழு
மன்னதனான்மன்னைமுணர்ச்சிவநெறியிற்
செலுத்தலேயருட்குமாட்சி
யென்னவெவையாளுடையபிள்ளையார்
திருவுள்ளத்தெண்ணிக்கூடற்
றென்னவனைநீறணிவித்தருளினர்நுங்
குருகிழோர்த்தெருட்டல்வீணே.

பல்லவனெனுமோர்வேந்தன்
றெரிந்துயப்பகர்வாகீசர்
கொல்லுநீற்றறையினுய்ந்து
நஞ்சினையமுதாக்கொண்டுஞ்
செல்லுயாவிறைஞ்சுவித்துந்
திரைக்கடற்றமையாத்திட்ட
கல்லினைமிதப்பித்தும்முற்
சிவனருள்காட்டுமாபோல்."

என ஏசுமதசங்கற்ப நிராகரணங் கூறுவதுங் காண்க.

பார்கள். ஆதியில் ஏசு சீஷரை நோக்கி, என்பொருட்டு எவன் தன் தாய் தந்தை பெண்டு பிள்ளைகளை மாத்திரமல்ல, தன் உயிரையும் பொருட்படுத்தாது வெறுத்து வருகின்றனோ அவனே என் சீஷனாவான் என்று சொன்ன தந்திரோபாயம் முற்றும் பலிக்காமையால் சீஷர்கள் முயிரைக் காத்துக்கொண்டார்கள். இல்லாவிடில் அவர்களும் அவமேமாண்டிருப்பார்கள்.

நெல் விதைத்தால் கொள்விளைவதில்லை, கொள்விதைத்தால் நெல் விளைவதில்லை; கல்லை ஆகாயத்திலெறிந்தால் அதுபொன்றாகிமீள்வதில்லை; நாயையொருவன் அடித்தால் அது அவன்மீது சிறிதும் அன்புகாட்டுவதில்லை, அதனை அன்போடு வளர்த்தால் அது பேரன்பு காட்டுகின்றது. நீதண்ணென்றிருப்பதும் தண்ணீர் தகிப்பதும் இயற்கை விரோதம். ஆதலின் இயற்கைக்கு விரோதம் என்று மெய்விடத்து நிகழ்வதில்லை. பாவஞ் செய்தவன் அதன் பயனை அநுபவியாமலும், புண்ணியஞ்செய்தவன் அதன் பயனை அநுபவியாமலும் போவதில்லையென்பது சத்தியமாம். ஒருவன்செய்தபுண்ணியபாவங்களின் பயன் அவனையன்றி மற்றியாரை யடையும்? உலகில் எச்செயல் செயினும் பிரதிபலிக்காது போவதுண்டா? இல்லையே. தான்றான் செய்கின்ற பாவ புண்ணியங்களைத் தான்றானே அநுபவித்தல் வேண்டும். விஷமுண்டவன் சாவன், அவ னுயிரோடிருக்கட்டும், அவனுக் கிடாக நான் சாகின்றேனென்று மற்றொருவன் சாகினும் விஷமுண்டவன் சாவாதிருப்பதில்லை. அவன்

பொருட்டுத் தன்னுயிரை விடுபவன் அறிவில்லா வீண னவன். விஷமுண்டவன் தான் பிழைக்க வேண்டுமாயின் அவ்விஷத்துக்கு மாற்றுயுள்ள வுட்கொள்ளுதற்கரிய கொடிய மருந்துகளைத்தானேயுண்ணல்வேண்டும். அதுபோல நாஞ் செய்கின்ற பாவங்களின் பயனை நாமே அனுபவித்துத் தொலைத்தாலன்றி நம் பாவம் போவதில்லை. கிறிஸ்தவர்கள் இரக்ஷகமென்பதின்ன தன்மையதென வுணராது, தன்னைத்தானே இரக்ஷிக்க வகையறியாத ஏசுவை இரக்ஷகர் எனக் கூறுதலு நம்புதலும் வைத்தியமுறை யொரு சிறிதேனும் தெரியப்பெறுவொருவனை வைத்தியனென நம்பிக்கெடும் பாமரர் செய்கைக் கினமாமென்க.

ஆதலின், கிறிஸ்த நண்பர்களே! இவ்வொரு பிறவியிலேயே பாவங்களைத் தொலைத்துவிடலாமென்று நம்பாதிருங்கள். இவ்வொரு பிறவியிலேயே மோக்ஷம் புகுந்திடலாமென்று அவசரப் படாதிருங்கள். நீங்கள் செய்கின்ற பாவ புண்ணியங்களை நீங்களே யனுபவித்தல்வேண்டும். உங்கள் பாவத்தின்பொருட்டு ஏசு பாடுபட்டது ஈடாகாது. அவர் பாடுபட்டது தன்பாவத்தின் பயனே. அன்றியும் உங்கள்பொருட்டு அவர் பாடுபட்டவராயின் மனசொப்பியாவது பாடுபட்டாரா! ஏன் என்னைக் கைவிட்டீர் என் பிதாவே என்று கதறிஅழுத அவர்கருத் துங்களுக்கு வெளியாகவில்லையா! ஐயோ! கிறிஸ்தவ நண்பர்களே! சாமானியனாகிய ஒருநரன் தன் பாவத்தின்பயனாகிய இறந்ததையெங்கள்பொருட்டு மடிந்

தாரென்றுநம்பி மோசம்போகின்றீர்களே. "செல்லுஞ் செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார்" என்றாற் போல, எந்தப் பாவத்தையுஞ் செய்வோம், ஒப்புக் கொள்ள ஏசு இருக்கிறாரென்று பாவங்களைக் கூசாமற் செய்கின்றீர்களே! ஏசுவை நம்பிய யூத்தேர் கதியை யாவது யோசித்தீர்களா! மலக்குழியில் வீழ்ந்து எடுப் பாரின்றி இறந்துபட்டது கண்கண்ட பயனன்றோ! பேதுருகதியென்ன! யூதர்கதியென்ன! சிந்தித்துப் பாருங்கள். இதனால் ஏசு ரக்ஷகரல்லரென்பது வெள்ளிடை மலையாம்; ஆகவே, அவரைநம்புவோர் இலவுகாக்கும் கிளிபோலாவரென்க.

---

## ௭-வது இயல். ஏசுதாம் பின் யாவர்?

ஏசுவென்றொருவர் இருந்த துண்மையானால், அக் காலத்து மேன்மக்கள் பண்டிதர் முதலியோரது மதிப் புக் கெட்டியிராத ஒரு அற்பமனுஷனாதல் வேண்டும். மதிப்புக் குட்பட்டவராயின் சரித்திரங்களிலே சொல் லப்பட் டிருத்தல்வேண்டும். அங்ஙன மில்லாமையால் $ தந்தையிருக்கப் பிறந்த ஏசு அவ்வவமானத்தைப் பரி

$ "ஆவியினமைந்ததேயன்றியன்னவன்
மாவுருச்சோணிதமயமுமன்றெனிற்
கோவவனவள்கருக்குழியிற்சேர்தலால்
யாவதோபயன்புறத்தெய்திற்கோதெதோ.
களவினிற்கணவனைக்கலந்தகன்னிகை
மழவயிற்றுநமிகவஞ்சிவாய்விடாண்
முழுமுதற்கடவுளின்முளைத்ததென்வயிற்
றெழுமருட்கருவெனச்சொல்லினளரோ."
(ஏசுமதசங்கற்ப நிராகரணம்.)

கரிக்கவேண்டித் தம்மைத் தேவகுமாரனென்று கூறிக் கம்மியர்க்கு இயல்பாகவுள்ள தந்திர ஜாலங்களால் கீழ் மக்கள் சிலரை மயக்கி அவர்களைத் தமக்குப் பலமாக் கிக் கொண்டார். § அதன்பின்னர்த் தாம் அவ்வழியே ஜனங்களைப் பெருஞ் சேனையாகத் திரட்டிக்கொண்டு அத்தேசத்துக்கு இராஜாவாகி விடலா மென்னும் மனோ ரதத்தினால் தம்மை யூதருக்கு இராஜா வென்று இரகசியத்தில் சொல்லத் தலைப்பட்டார். அதற்குள் அப் பேச்சு வெளிவந்துவிடவே சிலேஷார்த்தமாகச் சொன் னேன் என்று சிலகாலமாகச் சொல்லித் தப்பிக் கொண்டு இரகசியத்தில் ஜனங்களைத்திரட்டத் துணிந்து முயற்சித்தும் சித்தி பெறுமையால் அவமே யூதர் சில

---

§ ஏசு சேனை சேர்க்கும்பொருட்டும், சேர்த்து அவர் களுக் குயிர்க்கஞ்சாமல் யுத்தம்பண்ணும் தைரியத்தை யுண் டாக்கும் பொருட்டும் சூழ்ச்சிசெய்து உபதேசித்த உபாய வச னங்கள் வருமாறு:—"சிநேகிதரே! சரீரத்தைக் கொலைசெய்து அதன்பின்பு அதிகமாக வொன்றும்செய்யத் திராணி யில்லாத வர்களுக்குப் பயப்படாதிருங்கள். கொலை செய்து நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்......எவன் என் பொருட்டு ஜீவனை விடுகிறானோ அவனே என் சிஷன்"......... இப்படி யுபதேசித்துச் சேனைசேர்ப்பது இன்றும் எகிப்து நாட்டி லுண்டு. சிலகாலத்துக்குமுன் பெருங் கலகஞ் செய்து கடைசி யில் அங்கிலேயர் கைப்பட்டுக் கொழும்பிற் சிறையிருக்கும் அராபிபாக்ஷா என்னும் எகிப்தியரசன் செய்தியையுங் காண்க. ஆதியில் மோசே முதலியவர்களும் பெருஞ்சேனை சேர்த்தது மிப்படியேயாம்.

ருடைய கைப்பட் டிறந்தவ ராதல்வேண்டுமென்றி மற்றன்று. ஒருகுருவைப் பெரியவரென்று உள்ளபடியாயினும் பொருணயம் கருதியாயினுஞ் சேர்ந்து சீஷராக ஒழுகுகின்றவர்கள், அக்குருவினது பொய்யொழுக்கம் வெளிப்பட்டவிடத்துத் தாமும் அவமதிக்கப் படுவது கண்டு அதனை நீக்கிக்கொள்ளும் பொருட்டுத் தமது குருவுக்கு இல்லாத பல சிறப்புக்களை யெல்லாம் எடுத்துச் சாத்தி அவர் இறந்த பின்னருங் கொண்டாடுவது முன்னுளில் மாத்திரமன்று, இந்நாளிலும் பிரத்தியக்ஷமன்றோ! அதுபோல ஏசுவின் சீஷரும் ஏசு உயிரோடிருந்த காலத்தில் புகழ்ந்தமைக்கு மாறாக விளைந்த செய்தியைக் கண்டு உலகெல்லாம் பரிகசிக்கப் போகின்றதே என்னும் அச்சத்தால், மடிந்த ஏசு மீண்டு வந்தார், தரிசனம் தந்தார், நம்பாதவர்களையெல்லாம் நரகத்தில் தள்ளப்போகிறார், இது சத்தியஞ் சத்தியமென்று கட்டிவைத்த பொய்க்கதையே ஏசு கதையாம். அப்பால் அக்கதை பெரிதாகி இவ்வாறநர்த்தம் விளைவிப்பதாயிற்று. இதுபோலுங் காலின்றி நடக்கும் கதைகள் இன்றும் பல சகஜமாயினும் அறிவாற் சிறந்த இந்நாட்டில் ஓங்குவதில்லை. அறிவில்லா அந்நாட்டில் அந்நாள் ஓங்கிற்று அங்கும் இந்நாள் வீழ்வதாயிற்றென்க.

## அ-வது இயல். பைபில் கூறும் ஏசுவின் சரித்திரம் பொய்யென்பது.

ஏசுவைப்பற்றிக் கிறிஸ்தவர் சொல்லும் விசேஷங்களுக்கெல்லாம் பைபிலின் புதிய வுடன்படிக்கையே ஆதாரமாம். அப்புதிய வுடன்படிக்கையில் அவரது சரித்திரம் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் இந்நால்வரால் கூறப்பட்டுள்ளது. இந்நால்வரும் ஒருவருடைய சரித்திரத்தையே யெழுதினார்கள். இவர்களில் ஒருவருரைத்தபடி மற்றொருவருரைப்பதில்லை. சிலவிஷயங்களில் ஒருவர்க்கொருவர் மறுதலையாகவுங் கூறுகின்றார்கள். இதைப்பற்றிய விஷயங்களை "பைபில் யாரா லெழுதப்பட்டது" என்னும் புத்தகம் விகசிதப்படவிளக்குதல் காண்க. ஷை புதிய ஏற்பாடு ஏசுவின் சிஷர்கள் எழுதியதாக வுரைக்கின்றபடியால் ஏசுவின் காலம் அல்லது அதற்குமேல் ருo-வருஷங்களுக்குள்ளாக எழுதியிருக்கவேண்டும். அவ்வாறில்லை யென்பதற்கு அனேக ஆதாரங்க ளிருக்கின்றன. அவற்றிலொன்று: "கிரீக் பாஷையில் எழுதப்பட்ட ஷை புதிய ஏற்பாட்டில் (Talmudical Readings) டால் முடிகல் ரீடிங்ஸ் என்னும் இரண்டு கதைப் புத்தகங்களிலிருந்து ஆங்காங்கு மேற்கோளெழுதப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருகதையிலும் (Mishna) மிஷ்னு (Gemara) ஜெமரா என்னும் இரண்டுபிரிவுகளுண்டு. முதற்புத்தகத்தில் யூதர்களால்வழங்கப்படும் பழைய கதைகள் அடங்கியிருக்கின்றன. அது (Hakkadosh) ஹகடாஷ் என்னும் பட்டப்பெயர் வகி

த்த (Rabbi Jehudah) ராப்பி ஜெகுடா என்பவரால் ஏசு பிறந்ததாகச் சொல்லும் உ - வது நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டது. அதற்கு ச-வது நூற்றாண்டில் எருசலேம் பட்டணத்திலும், ரு-வது நூற்றாண்டில் பேபிலோன் பட்டணத்திலும் இரண்டு வியாக்கியானங்கள் எழுதப்பட்டன. புதிய ஏற்பாடு ஏசுவின் காலத்திலாவது ஏசுவின் சிஷர்களின் காலத்திலாவது எழுதியது உண்மையானால் ஏசு இறந்து கு0-வருஷங்களுக்குப் பின் ஷை ராப்பி ஜெகுடா என்பவரால் எழுதப்பட்ட ஷை கதைப் புத்தகத்திலிருந்து எவ்வாறு மேற்கோளெடுக்கக்கூடும்? நாம் இப்போது ஒருநூல் செய்வோமானால் நமக்குப்பின் கு0-வருஷங்களுக்குமேல் பிறக்கப்போகிறவர்களா லெழுதப்படும் புத்தகத்திலிருந்து மேற்கோ ளெடுப்போமா? இதனால் என்ன விளங்குகின்றதென்றால் ஏசுவின் காலத்திலாவது, அவர் சிஷர்களுடைய காலத்திலாவது பைபிலின் புதிய ஏற்பாடு எழுதவில்லையென்றும், அதற்கு கு0-வருஷங்களுக்கு மேலெழுதி ஏசுவின்காலத்திலும் அவர் சிஷர்களின்காலத்திலு மெழுதினதாகக் கற்பித்துக் கொண்டார்களென்றுமாம்."

ஷை புதிய ஏற்பாட்டைப் பலபேர் பலவிதமாக அக்காலத்தில் எழுதிக்கொண்டு வந்து இதுதான் கடவுளருளியது, இதுதான் கடவுளருளியது எனச் சொன்னார்கள். முடிவில் முனிஸிபாலிடியார் வோட் எடுப்பது போ லெடுக்க, பெரும்பாலார் சம்மதத்தின்பேரில் ஒரு

புத்தகத்தை இதுதான் கடவுளருளிய தெனக் கொண்டார்கள்.

தற்காலத்திய ஏசுவின் சரித்திரமாதிரிப் புத்தகமொன்று ஏசுவின்காலத்துக்கு முன்னரேயிருந்ததென்றும் அதைப் பெருக்கி யெழுதினதே ஏசுவின் சரித்திரமென்றும் அக்காலத்துப்பண்டிதரும் பாதிரிகளுமொத்துக்கொண் டிருக்கின்றார்கள். இவ்வகையாக அநேக ஆதாரங்க ளிருக்கின்றமையால் பைபிலின்கணுள்ள ஏசுவின்சரிதம் சுத்தப் பொய்யென்றே யொழிக்கற்பாலதாமென்க.

---

### கூ-வது இயல். முடிவுரை.

யுத்தியனுபவ வசனங்கட்கியைய இதுவரையினுஞ் செய்துவந்த ஆராய்ச்சியினால் ஏசுவென்பா ரொருவருண்மையி லிருந்தா ரன்றென்பதூஉம், உண்மையினிருந்துளராயின் பூருவசரித்திர மெழுதிய யோசிபாஸ் என்பவரால் அவசியங் கணிக்கப்பட்டிராரா வென்பதூஉம், ஏசுவென்பா ரொருவ ருள்ளவா யிருந்தாராகக்கொளினும் அவர்மாட்டுத் தெய்வாமிச மிலதென்பதூஉம், அவர் பிறந்தஞான்றே தேசத்திற் பெருங்குழப்ப முண்டாவதாயிற் றென்பதூஉம், அவர் அறிவுமாறுபா டுடைத்தா மென்பதூஉம், அவர்க்கிருந்த நட்புப் புல்லறிவாளர் குழுவினிடத் தென்பதூஉம், அவர்க்கு நியாயசாஸ்திர மிக்க சேய்மையதா மென்பதூஉம்,

அவர் தமது சீவிய காலமெல்லாம் பிசாசாலும் பிறராலும் அலைத்துலைக்கப்பட்டுப் பெருந்துன்ப முற்றனரென்பதூஉம், தம்மைக் காக்குமாற்றலு மிலராயினரென்பதூஉம், அணிமா முதலிய சித்திகளு ளொன்றேனும் அடையப்பெற்றிலரென்பதூஉம், கிறிஸ்தவர்கள்ஏசுவை இரக்ஷகரென்று நம்புவது வீண்மயக்கமாமென்பதூஉம், ஏசுவினுட னிருந்து பயின்ற மாணவர்களும் அவரை விசுவசித்திலரென்பதூஉம், ஏசு அரசற்குங் குடிகட்கும் ஏற்காதகாரியங்களை யியற்றிச் சிலுவையி லேற்றுண்டிறந்தா ரென்பதூஉம், அவரைப்பற்றிக் கூறும் பைபிலின் புதிய வேற்பாடுஞ் சுத்தப் பொய்யான கட்டுக்கதை யென்பதூஉம் பிறவும் வெள்ளிடை மலையாய் விளங்கியவென்க.

ஆதலின், கிறிஸ்தவ நேயர்காள்! மேற்போந்த விஷயங்களை நன்கு கடைப்பிடித்து நன்னெறியில் மீளுங்கள்; குருட்டுநம்பிக்கையை ஒழியுங்கள்; மண் குதிரையைக்கொண்டு ஆற்றைக் கடக்கத்துணியாதீர்கள்; நட்டாற்றிலே கரைந்துவிடும்; உங்கள் இரட்சகரும் மண்குதிரை; உங்கள் பைபிலும் மண்குதிரை; உங்கள் நியாயங்களும் மண்குதிரை; உங்கள் உபதேசிமார்களும் மண்குதிரை; அவர்கள் கல்வி அறிவும் மண் குதிரை. இப்படியானால் நீங்கள் கரையேறுவதெப்படி? ஆகையால் மெய்க் குதிரையாகிய நல்ல சாதனத்தை நாடி உய்ய வகை தேடுங்கள்.

**ஏசுவை நம்பினல் இரட்சிப்படையலாமா?**

**முற்றிற்று.**

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
விற்பனைக்குத் தயாராயிருக்கும்
கிறிஸ்துமத கண்டனமுதலிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அணா. | பை. |
|---|---|---|---|
| சைவதூஷண பரிகாரம் | ... | ௪ | 0 |
| கிறிஸ்தவ ஞானோதயாபாசவிளக்கம், ஏசுவைநம்பினால் இரட்சிப்படையலாமா? | | ௩ | 0 |
| கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு | ... | ௨ | 0 |
| விவிலிய குற்சிதம் | ... | ௨ | 0 |
| விவிலியகுற்சித திக்காரகண்டனம் | ... | ௨ | 0 |
| சிவநாமவிளக்கம் | ... | ௧ | 0 |
| ஏசுக்கிறிஸ்துவுங் கடவுளா? ஏசுக்கிறிஸ்து மனிதனே. | | ௧ | 0 |
| பைபில் யாராலெழுதப்பட்டது? | ... | 0 | ௬ |
| சிவனுந் தேவனு வென்னுந் தியநாவுக்கு ஆப்பு | | 0 | ௮ |
| திரியேகத்துவாபாசம் | ... | 0 | ௬ |
| பைபிலு முலகசிருஷ்டியின் ஆபாசமும் பாதிரிகளுக்கோர் சற்புத்தியும் | | 0 | ௩ |
| இந்துஜயபேரிகை நெ. ௨, ௩, ௪, தனி | ... | 0 | ௩ |
| 150 Contradictions of the Bible | ... | 1 | 0 |
| The Bible Dissector | ... | 0 | 6 |
| The Bible Contradicts History | ... | 0 | 6 |
| Was Biblical Prophecy fulfilled? | ... | 0 | 6 |
| The Effects of Believing the Bible | ... | 0 | 6 |
| Opinions on Social Matters of Raja Sir. T. Madhava Row, K. C. S. I. | 1 | 8 | 0 |
| Re-birth or Transmigration of Souls | ... | 2 | 0 |